திருக்கோயில்

நவம்பர் 1988 விலை ரூ. 3









கோயம்பேடு அருள்மிகு வைகுண்டவாசப் பெருமாள் ஆலயத்தில் அருள்மிகு கனகவல்லித்தாயார் மற்றும் ஆஞ்சநேயர் சந்நிதிகளின் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 14.9.88 அன்று மகாசம்ப்ரோட்சணம் விமரிசையாக நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

முகப்பு

திருவண்ணாமலை அருள்மிகு

அண்ணாமலை அண்ணலும்,

உண்ணாமுலை அன்னையும்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை :	திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள்	மணி :
30	நவம்பர் 1988 விலை ரூ. 3-00	11

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ. 18-00
ஓர் ஆண்டு	—	ரூ. 36-00
ஆயுள்	—	ரூ. 300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

தீபாவளி —நடராஜ தாசன்

கந்தவேள் கருணை — திருமுருககிருபானந்தவாரியார்

சித்திர பாரதம் —செவ்வேள்

நீரில்குமிழி இளமை —திருவாரூர் க. சுகுமாரன்

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை —வித்தியாதீர்த்ததாசன்

கண்ணன் எனும் கருணைத்தெய்வம் —விசாகன்

செம்மலர் நோன்தாள் —புலவர் அமுதன்

திருநீற்றுச் சிறப்பு —வித்துவான் க. செ. அருணாசலம்

திருப்பாவை தந்த திருப்பாவை —வே. தியாகராசன்

முத்தித்தரும்மலை அண்ணாமலை —பாஸ்கர தொண்டைமான்

கம்பரின் இராமாவதாரம் —டாக்டர் ந. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்

தீபாவளி வாழ்த்துகள்

திருக்கோயில் வாசகர்களுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்.

நடராஜதாசன்

பழைய காலத்தில் ஒரு நீதிபதியிடம் ஒரு வழக்கு வந்தது. ''உமது தாயார் எம் வீட்டிலிருந்து காயைப் பறித்தாள்'' என்பது புகார். அடுத்த வீட்டு மரத்தில் தன் அன்னை காயைப்பறித்தாள் என்பதை அறிந்து அந்த நேர்மையான நீதிபதி தான் தன் தாயை தண்டிக்கும் முறையில் ஐந்து ரூபாய் அபராதம் போட்டு, மேடையை விட்டுக் கீழிறங்கி, அந்த அபராதத்தைக் கட்டுவதற்குத் தன் அன்னைக்குப் பணம் கொடுத்தார் என்று ஒரு வரலாறு உண்டு. பெற்ற தாயானாலும் மகனானாலும் நீதியாவருக்கும் ஒன்றே என்பது இந் நாட்டு தருமம். அது கண்ணன் காட்டிய வழி.

இறைவனான திருமால் வராகவதாரம் எடுத்த காலத்து அவரது அழகில் ஈடுபட்ட பூமாதேவி திருமாலை நாயகனாக அடைந்தாள். அவள் வயிற்றில் பிறந்தவனே நரகாசுரன். இரக்கமே இல்லாத அரக்கனை மகனாகப் பெற்ற பூமி தேவி கலங்கினாள். தவறுள்ளவர்களை அழிப்பது தமது நாயகனான திருமாலின் வழக்கம் என்பதை பூமிதேவி அறிந்தபடியால் ''எவ்வளவு கொடியவனாயினும் அவன் என் மகனாயிற்றே. அவனது அழிவை நாம் எப்படித் தாங்குவோம்'' என்ற தாயுள்ளத்தின் ஏக்கம் அவளைத் தடுமாறவைத்தது. உன் அனுமதியின்றியோ, நீ இல்லாதபோதோ, நரகனை அழிக்கமாட்டேன்'' என்று திருமால் வாக்குக் கொடுத்தார்.

பூமிதேவி, திருமால் கண்ணனாக அவதரித்த போது, சத்தியபாமை என்ற பெயருடன் தோன்றிக் கண்ணனை மணந்து கொண்டாள். ஒருநாள் கண்ணனிடம் இந்திரன் வந்து ''பெருமானே! நரகாசுரன் என்பவன் என் அன்னையின் காதுகுண்டலங்களையும், எனது தோழனான வருணனின் குடை, கொடி முதலானவற்றையும் கவர்ந்து சென்றான்'' என முறையிட இறைவனான கண்ணன் கருட வாகனத்தில் தன் அருமைத் தேவியான சத்திய பாமையுடன் ஏறி நரகாசுரன் வசித்துக்கொண்டு இருந்த ப்ராக்ஜோதிஷபுரத்தையடைந்து அந்த ஊரையும் அங்குள்ள சேனைகளையும் அழித்து தன் அருமை மனைவியான பூமிதேவியின் அம்சமான சத்யபாமையின் எதிரிலேயே நரகாசுரனைக் கொன்றார். பூமிதேவியும் நேரில் வந்து கண்ணனை வணங்கித் தன் மகனான நரகாசுரனுக்கு நற்கதியளிக்கும்படி பிரார்த்தனை செய்து கொண்டாள். நரகாசுரனின அழிவுபற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் இவ்வளவே வரலாறு காணப்படுகிறது.

நம் நாட்டில் ஏதாவது நல்ல காரியம்நடந்தால் அதை மக்கள் புதிய ஆடைகள் அணிந்தும் அன்று எண்ணெய் தேய்த்து நீராடியும் பூ தானம் கோதானம் முதலானவை செய்தும் கொண்டாடுவது வழக்கம். சீதா பிராட்டிக்கு லவன் குசன் என்ற மக்கள் காட்டிலே வான்மீகியின் ஆச்சிரமத்திலே பிறந்த போது, வேறொரு காரியமாக சத்ருக்கன் காட்டில் சென்று அங்கு குழந்தைகள் பிறந்த செய்திகேட்டு ''ஆகா! இக்குழந்தைகள் அயோத்தியில் பிறந்திருந்தால், அயோத்தி மக்கள் பூதானம் கோதானம் முதலானவற்றை நிறையச் செய்து மேளதாள ஓசைகளுடன், நாட்டினர் அனைவரும் எண்ணெய் நீராடி எவ்வளவு மகிழ்ச்சியாகக் கொண்டாடி யிருப்பார்கள்'' என ஏங்கி எண்ணினான் என்கிறது உத்தரகாண்டம்.

பொய்யாத வேதியர்க்கு பூதானம் கோதானம்
முதல் பண்ணக்
கய்யார நிதி வீசிக் காகுத்தன் காளையர்கள்
பிறந்தாரென்று
மய்யார் பூம்பொழினகரி மகிழ்வெய்திமண
முரசமறைந்துநின்று
நெய்யாடலாற் சனங்கள் என்படுமோ என்று
நினைந்து நைந்தான்''

தீயவனான அரக்கனது அழிவைச்கொண்டாட ஆடை ஆபரணங்கள் யாவருக்கும் தானம் செய்து மக்கள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு நீராடினர். ஐப்பசி மாதம் மழைக் காலம். பலவிதமான சிறுசிறு பூச்சிகள் ஈரத்தில் தோன்றித் துன்புறுத்தும். இவைகள் பட்டாசு போன்ற வெடி மருந்துகளின் வாசத்தில் அழிய வேண்டும் என்பதற்காக வெடி முதலானவற்றை உபயோகித்தனர். நம் முன்னோர்கள் எக்காரியம் செய்தாலும் நம் ஆன்மீக முன்னேற்றத்திற்கோ கொண்டாட்டத்திற்காகவோ மட்டுமில்லாமல் மக்களின் ஆரோக்கியத்திற்காகவும் செய்வர் என்பது குறிப்பு.

காலை 3 மணிக்கு முன்னால் குளிக்கக்கூடாது அது தண்ணீரின் தேவதையான கங்காதேவி தூங்கும்நேரம் என்பர். இராமனைப் பிரிந்து நந்திக் கிராமத்தில் 14 வருடங்கள் வாழ்ந்த பரதன் அந்த நாட்கள் முழுதும் ''எனக்குப்பாவம் வந்தாலும் வரட்டும். பொழுது விடிந்த பின் நீர்நிலைக்கு வந்தால், அண்ணனின் அரசை வாங்கிக்கொண்ட நேர்மையற்றவன் என என்னைச் சுட்டிக்காட்டி

எவராவது பேசிவிடுவர். எவர் கண்ணிலும் நான் படமாட்டேன்'' எனக்கூறி காலை 3 மணிக்குமுன் னால் நீராடுவான் என ஒரு செய்தி உண்டு.

தீபாவளியன்று காலை 3 மணிக்கு தைல நீராடுவோருக்குக் கங்கையில் நீராடிய நற்பலன் உண்டு என்பது பெரியோர் வழக்கு.

வடநாட்டிலே இதே பண்டிகையை நிறைய விளக்குகளை ஏற்றிவைத்து, இருளை விரட்டி, வெளிச்சம் வரும் விழாவாகக் கொண்டாடுவதுடன் புத்தாடை உடுத்தி, வியாபாரிகள் புதுக் கணக்கு ஆரம்பிக்கும் நாளாகக் கொண்டாடுவர். தீபங்களை வரிசையாக வைப்பதால் தீபாவளி எனப் பெயர் பெற்றது இப்பண்டிகை.

நாட்டில் தீயசக்திகள் ஒழிந்து தருமம் தழைத்து யாவர் வாழ்விலும் ஒளிநிறைந்து வாழ அருளுமாறு உருக்குமணி சத்யபாமை உடனாய கண்ணனை வணங்கி நேயர்கட்கும் நம் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இன்றே செய்தாக வேண்டிய இன்றியமையாத கடமை

ஒட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலம்செய்யில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே

—திருநாவுக்கரசர்

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி-வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை

(சளியானது ஆறுபோல் வாயின் வழியாகப் பாயும் முன்னம் திருவையாறு ஈசனைக் தொழ வேண்டும் என்பது பொருள்)..

—ஐயடிகள் காடவர்கோன்

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்-கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை

(திரு நெடுங்களத்து ஈசனை வணங்கு எனபது பொருள்)

—ஐயடிகள் காடவர்கோன்

குயில்ஒத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சமே-மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியாய் ஆயின்
இருப்பின்னை அங்காந் திளைத்து

—ஐயடிகள் காடவர்கோன்

(குயிலைப்போல் கருநிறத்தில் காணப்படும் தலை முடி கொக்கைப்போல் வெள்ளை நிறமாகும் முன் மயிலை கபாலீசுவரரையும் கற்பகாம்பாளையும் தொழவேண்டும் என்பது பொருள்)

காலன் வருமுனமே கண்பஞ்சடை முன்னே
பால் உண் கடைவாய்ப் படுமுன்னே-மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார்சுடு முன்னே
குற்றாலத் தானையே கூறு.

—பட்டினத்தார்

கந்தவேள் கருணை

திருமுருக
கிருபானந்த வாரியார்

[11]

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், எல்லா மந்திரங்களுக்கும், வேதங்களுக்கும் மூலமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், காசியில் இறப்பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப் பிரம்மமாயும் விளங்கும் பிரணவத்தின் பொருளை ஆராயலானான் பிரம்மன்.

ஈசன் மேவரு பீடமாய் ஏனையோர்தோற்றும்
வாச மாய் எலாஎழுத்திற்கும் மறைகட்கும்
முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான்
கழறும்
மாசில் தாரகப் பிரமமாம் அதன்பயன்
ஆய்ந்தான்.

தாரகம் என்ற சொல்லுக்குத் தாண்டச் செய்வது என்று பொருள். எதனைத் தாண்டச் செய்வது? பிறவிப் பெருங்கடலைத் தாண்டச் செய்வது. பிறவிக் கடலைக் கடக்க உதவுவதால் ஓம் என்பது தாரக மந்திரம் எனப்பெற்றது.

கர்ப்ப ஜன்ம ஜராமரண ஸம்ஸார மஹத் பயாத் ஸந்தாரயதி தஸ்மாத் தாரகம்-என்கிறது தாரகோபநிஷதம்.

தாரகப் பிரமத்தின் பொருள் பிரம்ம தேவருக்கு விளங்கவில்லை. அவ்வாறெனில் நாம் எம் மாத்திரம்? யாருமே தங்களது அறிவால் விளங்கிச் கொள்ளக் கூடிய தத்துவமன்று, இறைவனிடம் அடைக்கலம் புகுந்தால் அவனது அருளால் மட்டுமே பிரணவப் பொருளை உணரலாம்.

தூமறைக் கெலாம் ஆதியும் அந்தமும்
சொல்லும்
ஓமெனப்படும் ஓரெழுத்துண்மையை யுணரான்
மாமலர்ப்பெருங் கடவுளும் மயங்கினன்
என்றால்
நாமி னிச்சில அறிந்தனம் என்பது நகையே.

தூய வேதங்களுக்கெல்லாம் முதலிலும் முடிவிலும் சொல்லப்படும் ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருளை பிரமதேவரே அறியாது மயங்கினார் என்றால், நாம் இனிச் சிறிது அறிந்தோம் என்பது நகைப்புக்கு இடமாகும் என்கிறார் கச்சியப்பர்.

பிரணவப் பொருள் அறியாத பிரம்மதேவர் சிவபெருமானிடம் வேதங்களைப் பாடம் கேட்ட போது இதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் போனோமே' என்று எண்ணி எண்ணி ஏங்கினார். பிரம்மதேவர் மயங்குவதைக் கண்ட முருகப்பெருமான், ''பிரணவத்தின் பொருளை அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு புரிவாய்?'' என்று சினந்து கூறிப் பிரம்மதேவரின் நான்கு தலைகளும் குலுங்கும் வண்ணம் குட்டினார்.

எட்டொணாதவக் குடிலைபிற் பயன்இனைத்
தென்றே
கட்டுரைத் திலன் மயங்கலும் இதன்பொருள்
கருதாய்
சிட்டி செய்வதித் தன்மைய தோவெனாச்
செவ்வேள்
குட்டினான் அயன் நான்குமா முடிகளும்
குலுங்க

ஒன்றினைச் செய்யுமுன் அதன் பொருளை உணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் விபரீதமாகும். உலகைப் படைப்பதாகச் சொன்ன பிரம்மனோ அதன் உட்பொருளாக உறையும் பிரணவ வார்த்தையையே அறிந்திருக்கவில்லை; அதனால்தான் முருகன் அவ்வளவு சினம் கொண்டார்.

பிரம்மதேவனின் நானகு தலைகளிலும் முருகப்பெருமான் தமது பன்னிரண்டு கரங்களையும் தலைக்கு மூன்று வீதம் வைத்துக் குட்டினார். பிரம்மதேவரின் எட்டு நாசித் துவாரங்களிலும் உதிரம் வந்தது. அவரது சிகை விபூதிபோல் துகள்பட்டு உதிர்ந்ததாம். அதை அருணகிரியார் கூறுகிறார்.

''நாலுமுக னாதியரி யோமெனுஅதாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு
ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு
மிளையோனே''
''உகந்த பிரணவத்தின் உண்மை-புகன்றிலை
யால்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன்
என்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே''

-கந்தர் கலிவெண்பா

பிரம்மதேவனின் அகங்காரம் முழுதும் தொலைந்து புனிதனாகும்படி குமாரமூர்த்தி தமது திருவடியால் அவனை எற்றித் தள்ளிப் பாத தீட்சை தந்தருளினார். கற்பகோடி காலம் கடுந் தவம் புரிந்தாலும் கிடைத்தற்கரிய எம்பெருமான் திருவடி பிரம்மதேவர் மேல் படுவதற்கு அவர் எத்தகைய புண்ணியம் செய்தாரோ?

மறைபுரிந்திடுஞ் சிவனருள் மதனை மாமலர் மேல்
உறைபுரிந்தவன் வீழ்தரப் பதத்தினால் உதைத்து
நிறைபுரிந்திடு பரிசனரைக் கொடே நிகளச்
சிறைபுரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்.

கந்தக் கடவுள் வீரவாகு தேவரை நோக்கி, ''தம்பி! இருண்ட மனத்தினாகிய இவனைச் சிறையிடுக'' என்று கட்டளையிட்டார். வீரவாகு தேவரும் மற்ற வீரர்களும் பிரம்மதேவரின் கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டி, அவரைக் கந்தவெற்பில் ஒரு குகைக்குச் கொண்டுபோய் ''முருகவேளை நம்பி எண்ணாமையால் கம்பி எண்ணக்கடவாய்'' என்று சிறை வைத்தனர்.

அயனைச் சிறைபுரிந்த பின் கந்தக் கடவுள் படைப்புத் தொழிலைத் தாமே ஏற்கத் திருவுளங் கொண்டார். முத்தொழிலுக்கும் தலைவராம் முருகப்பெருமான் கந்தவெற்புக்குச் சென்று ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு, ஒரு திருக்கரம் ஜபமாலையும், ஒரு திருக்கரம் கமண்டலமும் தாங்க, மற்றைய இரு திருக்கரங்களும் வரதமும் அபயமும் வழங்க, படைப்புத் தொழிலை மேற்கொண்டருளினார். நவவீரர்கள், இலக்க வீரர்கள், இந்திரன், திருமால், தேவர்கள், இருடியர் முதலிய கணத்தவர்கள் எம்பெருமானைச் சூழ்ந்து துதித்து நின்றார்கள்.

ஒரு கரந் தனில் கண்டிகை வடம்பரித்(து) ஒருதன்
கரதலந் தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரதமோ டபயந்தரப் பரம்பொருள் மகனோர்
திருமுகங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்

மூவர்களை முத்தொழில் புரிய நியமித்த எம்பெருமான், தாமே இப்போது சிருட்டித் தொழில் புரிந்ததால் அதற்கேற்பத் திருமகள் நாயகனார் காத்தல் தொழிலும், உருத்திர மூர்த்தியால் அழித்தல் தொழிலும் புரிய முடியவில்லை. முருகப்பெருமான் அவற்றையும் தாமே செய்தருளி முத்தொழிற்கும் தாமே முதல்வர் என்பதைக் குன்றின் மேலிட்ட விளக்கென உணர்த்தியருளினார்.

உயிரினுக் குயிராகியே பரஞ்சுடர் ஒளியாய்
வியன்மறைத் தொகைக் கீறதாய் விதிமுதல் உரைக்கும்
செயலினுக் கெலாம் ஆதியாய் வைகிய செவ்வேள்
அயன்எனப் படைக்கின்றதும் அற்புதம் ஆமோ?

உயிர்க்குயிராயும், பேரொளிப் பிழம்பாகவும், வேதமுடிவாயும், ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கட்கும் தலைமையாயும் விளங்கும் முருகப்பெருமான் படைத்தல் தொழிலைப் புரிகின்றதில் ஒன்றும் வியப்பு இல்லை.

சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்சம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களையும் கந்தவேள், தாம் நிமித்தக்காரனாக நின்று, முதற்காரணமாகிய

மாயையிலிருந்தும், துணைக் காரணமாகிய சக்தியைக் கொண்டும் படைத்து, காத்து, அழித்து திருவருள் புரிந்தார். செவ்வேட் பரமன் புரியும் படைப்பில் தோன்றிய ஆன்மாக்கள் பெற்ற பேற்றை அளவிட்டுக் கூற வல்லார் யார்? அப்படைப்பில் வந்த யாவரும் புண்ணிய வடிவாகவே விளங்கினர். பாவம் என்பது அறவே நீங்கிற்று. எங்கும் மெய்ஞ்ஞானம் மிளிர்ந்தது. சிவ மணம் கமழ்ந்தது.

ஆறுமுகக் கடவுள் அளவற்ற காலம் அயனைச் சிறைவைத்துச் சிருட்டித் தொழிலைப் புரிந்து கொண்டிருந்தார்.

பிரம்மனைச் சிறையிலிருந்து விடுவிக்க எண்ணிய திருமால், ஆதித்தர்களும், மருத்துக்களும், வசுக்களும், சப்த மாதர்களும், விஞ்சையர்களும், கருடர்களும், இயக்கர்களும், திக்குப் பாலகர்களும் சந்திரனும், ஏனைய கிரகங்களும், நட்சத்திரங்களும் அகத்தியர் முதலிய முனிவர்களும் ஆதிசேடனும், நாகர்களும் தொடர வெள்ளியங்கிரி அடைந்தார். சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, மறைமுறை துதித்து நின்றார். ''எம்பெருமானே! தேவரீருடைய திருக்குமாரராகிய 'சுப்பிரமணியக் கடவுள், பிரம்ம தேவரிடம் பிரணவத்துக்குப் பொருள் கேட்டார். பிரம்மதேவர் அதனை அறியாது மயங்கியதால் அவரது சிரங்களில் குட்டி, சிறையில் அடைத்துவிட்டுத் தாமே படைப்புத் தொழிலையும் பரிபாலனத் தொழிலையும் செய்கின்றார். அடியேனுக்கு வேலையில்லை''.

''எமது துன்பம் நீக்கி இன்பம் வழங்கும் பொருட்டு அவதரித்த முழு முதற்கடவுளாகிய முருகப்பெருமானைப் பிரம்மன் தமது பேதமையால் சிறுபிள்ளை என்று எண்ணி வணங்காது சென்றார். அதன் பயனாக எண்ணற்ற காலமாகச் சிறைப்பட்டு மனம் நொந்திருக்கிறார். எவ்வுயிருக்கும் தேவரீரே பரமபிதா. முருகக் கடவுளைப் போல் பிரம்ம தேவரும் தேவரீருக்கு மைந்தரேயாவர். ஆகவே அவரைச் சிறையினின்றும் விடுவித்துத் திருவருள் புரியவேண்டும்'' என்று திருமால் விண்ணப்பித்துக் கொண்டார்.

சிவபெருமான் புன்முறுவல் செய்தார். ''தேவர்களே! சிவம் வேறு, குமரன் வேறு என்று பின்னம் பேசுவோர் மடவோரே. என்னையும் குமார மூர்த்தியையும் பிரித்து உணர்கின்றவர்கள் ஒரு போதும் இன்பமடையமாட்டார்கள். இந்த உண்மையை உணராத பிரம்மன் நல்லுணர்ச்சி பெற்று உய்யும் பொருட்டே நம் குமரான் அவனைத் தண்டித்துச் சிறையில் அடைத்தானேயன்றி தன்னை வணங்கவில்லை என்பதற்காக அல்ல.

''ஈசாநஸ் ஸர்வவித்யாநாம் ஈச்வரஸ் ஸர்வ
பூதாநாம்
ப்ரஹ்மாதிபதிர் பிரஹ்மணோதிபதிர்
ப்ரஹ்மா சிவோமே அஸ்து ஸதாசிவோம்'.

என்று வேதம் எம்மை ஒரு முறையே பிரணவ சப்தத்தால் அழைக்கின்றது. நம் குமாரக்கடவுளையோ, 'சுப்ரஹ்மண்யோம் சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்'' என்று மூன்று முறை 'ஓம் ஓம் ஓம்' எனப் பிரணவத்தில் இணைத்துக் கூவியழைக்கும். இதனை அறியாது தருக்குற்ற பிரம்மனைச் சிறையினின்று விடுவிப்பது எவ்வாறு?

வறுமை வேண்டாதவர் அம்பிகையை வணங்குங்கள்!

இல்லாமை சொல்லி ஒருவர்தம்
பால்சென்று இழிவுபட்டு

நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்
நித்தம் நீடுதவம்

கல்லாமை கற்ற கயவர்தம்பால்
ஒரு காலத்திலும்

செல்லாமை வைத்த திரிபுரை
பாதங்கள் சேர்மின்களே

—அபிராமி அந்தாதி

''எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்,
பிரம்மனுக்கும் ஈசன் என்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவன் ஓம்
எனவேதம் சாற்று மல்லால்
முக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணியன்
ஓமெனவும் முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்
பாய் இயம்புமின்னோ?''

என்று வினவியருளினார்.

எனினும், கருணைக் கடவுளானபடியால் கண்ணுதற்கடவுள் தேவர்பால் திருவுளம் இரங்கினார். ''நந்தி! நீ குமரக் கடவுளிடம் சென்று, நம் வாசகத்தைக் கூறி நான்முகனைச் சிறைவிடுத்து இங்கு மீண்டு வருக'' என்று பணித்தருளினார். நந்தி தேவர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு அளவற்ற கணங்கள் சூழக் கந்த வெற்பையடைந்து, ஆறுமுகவள்ளலது அருணசரணாரவிந்தங்களை முறைப்படி வணங்கித் துதித்து வந்த காரியத்தைக் கூறினார்.

முருகக் கடவுள் புன்னகை புரிந்து, ''நான்முகனைச் சிறை நீக்கேன்; இங்கு நீ நின்றால் உன்னையும் சிறையிலிடுவேன்; விரைந்து ஓடிப்போ'' என்று திருவாய் மலர்ந்தருளினார். திருநந்திதேவர் வேறொன்றும் விளம்பாது அஞ்சி நடுநடுங்கி, முருகப்பெருமானை வணங்கிக் கொண்டு, திருக்கயிலை சென்றார். அங்கே சிவபெருமானின் திருமுன் சென்று வணங்கி, முருகப்பெருமான் திருவாய் மலந்தருளிய வாசகத்தை விண்ணப்பம் செய்தார்.

நந்திதேவர் கூறியதைக் கேட்ட மணிகண்டபெருமான் திருநகை செய்து, சிங்காசனத்தினின்றும் எழுந்தார். இடபவாகனத்தில் அமர்ந்து திருமாலும் ஏனைய தேவர்களும் அருந்தவ முனிவரும் துதித்துப் பின் தொடரத் திருக்கயிலை, நீங்கித் தாமே கந்தவெற்பை அடைந்தார். முருகக் கடவுளின் திருக்கோயிலின் முன் சென்றவுடனே இடபத்தினின்றும் இறங்கி, உள்ளே புகுந்தருளினார்.

தந்தையைக் கண்ட குமாரக்கடவுள், ''எந்தையார் வந்தருளினார்'' என்று இருக்கை விட்டிறங்கி எம்பெருமானை எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக் கொண்டு போய்த் தமது திவ்விய சிங்காசனத்தின் மீது எழுந்தருளச் செய்தார்.

''உயிருக்குயிராகிய எம்பெருமானே! தாங்கள் எழுந்தருளி வந்த செயல் யாது?'' என்று வினவினார். சிவபெருமான் தமது திருக்குமாரருடைய இனிய மொழிகளைக் கேட்டுப் பேருவகை கொண்டார். ''குழந்தாய்! நீ பிரம்மனைச் சிறை புரிந்தாய். அதனை நீக்கக் கருதியே நாம் வந்தோம். அயனைச் சிறையினின்று நீக்கக் கடவாய்''? என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இளம்பூரணர் தமது திருமுடியை அசைத்தார். ''எந்தையே! பிரணவத்தின் பொருள் தெரியாதவன் உலகத்தைப் படைப்பது என்பது பேதமையே! ஐயனே தங்கள் திருவருளின் அழகே அழகு வேதத்தின் முன் நின்ற குடிலை மந்திரத்தின் பொருளறியாதவன் தங்களுக்குப் பூசைசெய்வதா? தேவரீர் படைத்தல் தொழிலாகிய பொறுப்பை அவனுக்குத் தருவதா? அகந்தை நீங்காத அயனைச் சிறையினின்றும் வெளியே விடுவது முறையன்று'' என்று கூறினார்.

சிவபெருமான் சற்றே சினம் கொண்டவர் போல் குமரக்கடவுளைப் பார்த்தார். ''மகனே! உன் செய்கை நன்று. நமது ஆணையின்படி நந்தி வந்து கூறியும் நீ கேட்கவில்லை. நான்முகனை சிறையினின்றும் விடுவிக்குமாறு நாமே வந்து கூறியும் மறுக்கலாமோ''? என்று மொழிந்தருளினார்.

பிதாவின் கருணையைக் கண்ட முருகக் கடவுள், ''ஐயனே! தேவரீர் திருவுளம் இதுவாயின் பிரம்மனைச் சிறை நீக்கித்தருவேன்'' என்று கூறினார். அருகில் நின்ற பூதர்களில் சிலரை நோக்கிய கந்தக் கடவுள், நீங்கள் விரைந்து சென்று பிரம்மனைச் சிறை நீக்கி, நம் முன்கொண்டு வாருங்கள்' என்று பணித்தருளினார். அந்த ஆணையின் வண்ணம்பூதர்கள் சென்று குகைக்குள்ளே விலங்கிடப்பட்டு ஒடுங்கியிருந்த பிரம்மனைச் சிறைவிடுத்து முருகவேள் திருமுன் அழைத்து வந்தனர். முருகவேள் பிரம்மனின் கையைப் பிடித்துச் சிவபெருமான் திருமுன் விடுத்தார்.

சிறையினின்றும் விடுபட்ட பிரம்மன் சிவபெருமானை மெய்யன்புடன் வணங்கித் துதித்து வெட்கி நின்றான். சிவபெருமான் நான்முகனுக்குத் திருவருள் நோக்கம் செய்தார். ''நான்முகனே! நீ நெடுங்காலம் சிறைபட்டு இளைத்தனை போலும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

''கருணைக் கடலே! தேவரீருடைய திருக்குமாரர் அடியேனுக்கு அளித்த இத்தண்டனை சிறைவாசம் அல்ல; தவச்சாலை வாசம்! அவர் திருவடி தீண்டியது ஸ்பரிச தீட்சை! அதனால், யான்-எனது என்னும் அகந்தை அழிந்து தீவினைகள் நீங்கின; சித்திசுத்தி விளைந்தது; அடியேன் புனிதனானேன்'' என்று விண்ணப்பம் செய்தார் பிரம்ம தேவர். சிவபெருமான் பிரம்மனை நோக்கி, ''நீ இன்று முதல் உன் படைப்புத் தொழிலை முன் போலவே செய்து கொண்டிரு'' என்று அருளிச் செய்தார்.

கந்தக்கடவுளை நோக்கித் திருமுறுவல் செய்தார் தந்தைக் கடவுள். ''குழந்தாய்! வருக'' என்று அழைத்தார். அருகே வந்த குமாரக் கடவுளைத் தமது திருக்கரத்தினால் எடுத்துத்தமது மடியின் மீது அமர்த்திக்கொண்டு உச்சிமோந்து தாமரையனைய தமது திருக்கரங்களால் தழுவிக் கொண்டார். ''குழந்தாய்! பிரம்மனும் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்வாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

காமரு குமரன் சென்னி கதுமென வுயிர்த்து செக்கர்த்
தாமரை புரையுங் கையாற் றழுவியேஅயனுந் தேரா
ஓமென வுரைக்கும் சொல்லின் உறுபொருள் உனக்கு போமோ
போமெனில் அதனை யின்னே புகலென இறைவன் சொற்றான்

''அண்ணலே! உலகமெல்லாம் பெற்றருளிய அன்னையாகிய எம்பிராட்டிக்கு தாங்கள் பிறர் அறியாத வண்ணம் உபதேசித்தருளிய பிரணவத்தின் பொருளை இரகசியமாகக் கூறுவதே அன்றி யாவரும் கேட்கும் வண்ணம் சொல்வது முறையாகுமோ? காலம் இடம் அறிந்து முறைப்படி கேட்டால் சொல்வோம்'' என்றார் ஆசாரிய நாயகரான ஆறுமுக சுவாமி.

உபதேசிக்கும் குருவாயிருந்த சிவபெருமானுக்கு உபதேசம் கேட்கும் சிஷ்யனாகவும் இருக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. எளிமைக்காகவே ஏங்குபவரல்லவா எம்பெருமான்!

''குழந்தாய்! நீ கூறியது முற்றிலும் உண்மை'' என்று கூறிய சிவபெருமான், தமது இருக்கையை விட்டெழுந்து, கைகளைக் குவித்து, சிரம் தாழ்த்தி, வாய்பொத்திச் செவிசாய்த்து, ''உலகங்களுக்கெல்லாம் நாதனே! குமாரக்கடவுளே!'' என்று பக்தியுடன் துதித்து நின்றார்.

நாதபோற்றியென முதுதாதைகேட்க அனுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமானே.

—திருப்புகழ்

குருநாதரிடம் சிஷ்யன் எப்படிநடந்துகொள்ள வேண்டும் என்ற தர்மத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டுச் சிவபெருமான், தனக்குத் தானே முருகனாகிய அப்பெருமாணடம் உபதேசம் கேட்டார்.

நிருபகுரு பரமகுரு என்றென்று பக்தி கொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினது வழியடிமையும் விளங்கும் படிக்கினிது
உணர்த்தியருள்வாயே''

—திருப்புகழ்

புரமெரித்த புரிசடைக் கடவுள் பக்தியுடன் வழிபட்டு நிற்க, முருகக் கடவுள் தவிசின் கண் வீற்றிருந்து கல்லாலின் கீழ் தென்முகப் பரமாசாரியராக எழுந்தருளி சனகாதி முனிவர்களுக்கு மோன நிலையை உபதேசித்து குருநாதருக்கும் குருவாக விளங்கி அகரமுதலெனவுரைசெய் ஐம்பத்தொரட்ஷரத்தில் தொடங்கிக் குடிலை மந்திரத்தின் பொருளை அமுதமாக மழலை மொழியால் ஆற்புதம் அற்புதமாக உபதேசித்தருளினார்

''அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய
பெருமானே

—திருப்புகழ்

பிரணவ மந்திரத்துக்குப் பொருள் தெரியாமலே உலகைப் படைக்கும் தருக்குற்றிருந்த பிரம்மனால் நேர்ந்த அமுதமான நிகழ்ச்சியல்லவா இது?

(தொடரும்)

நூல் மதிப்புரை

நூல் பெயர்: புள்ளிருக்குவேளூர்ப் புனிதப் பனுவல்
ஆசிரியர்: சுவாமி சரவணபவானந்தர்
விலை ரூ. 5.00
வெளியீடு: சரஸ்வதி பதிப்பகம், 227 டி.பி.கே. ரோடு, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18

சம்பாதி, சடாயு, இருக்குவேதம், சூரியன், முருகர், இராமலக்குவனர்களால் வழிபடப் பெற்ற அருள்மிகு வைத்தீஸ்வரன் கோயில் தல வரலாறு நூல் இது. கலைமாமணி பட்டம் பெற் றிருப்பவர் சுவாமி சரவணபவானந்தர். இசைப் பாடல்களாலேயே இத் தலவரலாற்றின் சிறப்பு களையெல்லாம் பாடியிருப்பது பாராட்டத்தக்க பணி.

சான்றிற்கு ஒரு பாடல்:

புள்ளிருக்கு வேளூர்ப் போய்வருவோம் வாரீர்
பொல்லாத வினையனைத்தும் நில்லாதுபாரீர்
(புள்)
வெள்ளிய நிறபட்சி ஜடாயுவின் நிலமாம்
வேதமும் நின்று வரம் வேண்டிய தலமாம்
(புள்)
வேள்எனும் முருகப்பிரான் விளையாடும்
இடமே
மேடையில் சூரியனும் ஆடுவான் நடமே
தோள்வலி மிக்கச் செவ்வாய் துதித்திடும்
தடமே
தூக்கினாள் தாய் தலையில் தைலமண்குடமே
(புள்)

2. நூல்: அடித்ததுபோதும்
ஆசிரியர்: புலவர் வ.ஞானப்பிரகாசம்
விலை: 10.00
வெளியீடு: அருள்வடிவேலன் பதிப்பகம், 44 அ.கட்டிமுத்து முதலியார் வீதி முருகேச நகர், கடலூர்607004

அருட்பிரகாச வள்ளலாரின் ''திருவருட்பா'' விளக் கக் கட்டுரைகள் ஆறு இந்நூலில் இடம் பெற்றுள் ளன. அவை வருமாறு: (1) அடித்தது போதும். (2) சோற்றானை (3) பணியாது உண்ணப் பருக் கும் உடம்பு (4) மாலையில் ஒருமணி (5) நதியைத் தேடிவந்த கடல் (6) வள்ளலாரும் சிவானந்தரும்.

''தர்மச் சாலைக்கு ஒருநாள் இரவு உணவு நேரத்தில் பலர் வந்துவிட்டனர். சமைத்த உணவோ குறைவாக இருந்தது. வள்ளல் பெருமான் அனைவர்க்கும் இலையைப் போடச் செய்து தம் கையாலேயே அனைவர்க்கும் பரி மாறினார். அடிகளின் திருக்கரமே அமுதசுரபி யாகி அனைவரும் உண்ட பின்னும் உணவு எஞ்சி யிருந்தது''.

இவைபோன்ற சுவையான வரலாறுகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

3. நூல் பெயர்: மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை.
உரையாசிரியர்: அம்பை, இரா.சங்கரன்
விலை: ரூ. 7.00
வெளியீடு: சைவத்தமிழ் இலக்கியமன்றம் 16, நெசவாளர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.

சைவத் திருமுறைகளைப் பன்னிரண்டாக வகுத்துள்ளனர். பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள 40 நூல்களில் அதிரா அடிகள் அருளிய மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை நூலிற்குச் சித்தாந்த செம்மல் அம்பை இரா.சங் கரனார் அரிய உரை விளக்கம் தந்துள்ளார்.

''விநாயகர் பிறந்தது பிரம்மனின் தலை கொய்த சிவபெருமானிடம். அவர் எழுதியது வேத வியாசரால் அருளப்பெற்ற மகாபாரதம். இவ்வளவு உயர்ந்த பெருமைமிக்க விநாயகரை நாம் எவ் வாறு துதிப்பது? துதிக்கும் ஆற்றல் நமக்கு ஏது?'' என்று உரையாசிரியர் கூறும் கருத்து விளக்கங்கள் சிறப்பானவை.

1949இல் தோற்றம்பெற்ற சைவத்தமிழ் இலக்கிய மன்றம் இந்நூலைப் போலவே பிற பன் னிரு திருமுறை நூல்களையும் பதிப்பிக்கலாம்.

4. நூற்பெயர்: புலவர் பேரரசர் ஒட்டக்கூத்தர்
நூலாசிரியர்: புலவர் பி.மா.சோமசுந்தரனார்
விலை: ரூ. 12.00
வெளியீடு: சேக்கிழார் பதிப்பகம் 8ஏ சந்நிதிதெரு வடதிருநாகேசுவரம் குன்றத்தூர், சென்னை-600069

மலரிவரும் கூத்தரின் மாட்சி, ஒட்டக்கூத் தர் வரலாறு, கவிச்சக்கரவர்த்தியும் புவிச்சக்கர வர்த்தியும், ஒட்டக்கூத்தரின் குணநலன்கள், கூத் தர் நூல்களும் அவர் காலத்துப் புலவர்களும், கூத்தர் படைக்கும் புலமை விருந்து, கூத்தரும் வரலாறும், கூத்தரும் புகழேந்தியும், கூத்தரும் கம்பரும், பரவுக கூத்தர் புகழ் எனும் பத்துத் தலைப்புகளில் கூத்தரின் வரலாற்றை ஆய்ந்து காட்டியுள்ளார்.

''நாம் கூத்தரைப் போற்றுவோமாக. அவர் நூல் நயத்தை நுகர்வோமாக. ஒட்டக்கூத்தரின் உயர்ச்சியைப் போற்றி விழா எடுப்போமாக'' என்கிறார் நூலாசிரியர்.

5. நூல்பெயர்: அருள்மிகு அம்பிகை மீனாட்சி அழகொளிர் போற்றி
ஆசிரியர்: மருத்துவப் புலவர் ச.ஆறுமுகநாதன்
விலை: ரூ.5.00
வெளியீடு: பாவலர் பதிப்பகம், 14, தெற்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை-17

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அண்மைக்காலம் வரையிலும் அன்னை மீனாட்சி புரிந்திருக்கும் அற்புதங்களை மிக விரிவாக எடுத்து இயம்புகிறது இக்கவிதைநூல்.

''கருவுறா அன்னை கன்னியாய் என்றும்
கட்டுடன் இலங்கும் மீனாட்சி
திருமிகு மலயத் துவசனார் பெற்ற
சிவசக்தி எங்கள் மீனாட்சி
அருள்வடி வானவள் அங்கயற் கண்ணி
ஆலவாய் திகழ்பெரு மாட்டி
மருவுநற் சொக்கர் துணைவியாம் எங்கள்
மதுரைமீ னாட்சியே போற்றி''.

6. நூல் பெயர்: புலமைப்புறா ஆசிரியர்: சேயோன்
விலை: ரூ. 13.00
வெளியீடு: முரளிபதிப்பகம், 6, வசந்தா பிரஸ் சாலை, அடையாறு, சென்னை-600020

தொல்காப்பியம் கூறும் வாழ்வியல் சிந்தனை கள், குறள் உணர்த்தும் இலக்கியங்கள், நன்னூல் நவிலும் நன்னெறிகள், மொழியுணர்ச்சி ஊட்டிய மூதாதையர், புலமைப்புறா, சிலம்பு போற்றும் செந்நெறிகள், அப்புலியின் அற்புதம், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, கவியரசரின் கற்பனை ஒலியங்கள் ஆகிய ஒன்பது இலக்கிய ஆய்வுக் கட் டுரைகள் இந்நூலில் உள்ளன. படிக்கத்தக்க பாராட்டுதற்குரிய நூல்.

சித்திர பாரதம்
கதை வடிவம்:— செல்வேள்
படம்: MN.ராஜா
அஸ்தினா புரத்தை ஆண்டு வரும் சந்தனு மன்னன் வேட்டைக்குப் போகும்போது கங்கைக் கரையில் ஒரு மங்கையைக் காண்கிறான்.
என்னை நீ திருமணம் செய்து கொள்கிறாயா?
என் செயல் எதுவானாலும், நீ தடுக்கவோ, காரணம் கேட்கவோ கூடாது. இதற்குச் சம்மதமானால் நான் திருமணம் புரிவேன்!
அப்படியே ஆகட்டும்.
சந்தனு-கங்கை மணவாழ்க்கையின் பயனாகக் குலம் தழைக்க ஒரு கோமகன் பிறக்கிறான். ஆனால் குழந்தையைப் பிறந்த உடனேயே கங்கை, கங்கை நீரில் மூழ்கடித்துக் கொன்று விடுகிறாள். கங்கைக்குச் செய்து கொடுத்த சத்தியம் காரணமாகச் சந்தனுவும் அவளை ஏன், எதற்கு என்று கேட்கவில்லை. அடுத்தடுத்துப் பிறக்கும் மற்ற ஆறு குழந்தைகளையும் கூட கங்கை, நீரில் மூழ்கடித்து விடுகிறாள்.
எட்டாவதாகப் பிறக்கும் குழந்தையையும் கொல்வதற்காகக் கங்கை கொண்டு செல்லும்போது சந்தனு தடுக்கிறான்.
"நீ பெண்ணா? பேயா? நில்!"
"மன்னா! இதோ உன் குழந்தை. நான் யார் என்பதையும் எதற்காக ஏழு குழந்தைகளையும் கொன்றேன் என்பதையும் இப்போது கூறுகிறேன் கேள்"

"முன் பிறப்பில் நீயே வருண தேவன். நான் கங்கா தேவி. பிரமதேவரின் ஆலோசனை மண்டபத்தில் நீ இச்சையோடு என்னை நோக்கினாய். நானும் உன்னிடம் என் மனதைப் பறி கொடுத்தேன். பலர் காண நாம் அநாகரீகமாக நடந்து கொண்ட இச்செயலைக் கண்டு கோபித்துப் பிரம்மா நம்மைச் சபித்தார்."
பூமியில் போய் பிறக்கக்கடவீர்!
"பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த என்னைக் கண்டு அத்வரன், அனலன், அநிலன், ஆபன், சோமன், துருவன் பிரத்யூசன், பிரபாசன் எனும் அஷ்டதேவர்கள் வணங்கித் தொழுதார்கள்."
"என் பெயர் பிரபாசன். என் மனைவியின் சொல்லைக் கேட்டு இவர்களையும் அழைத்துக் கொண்டு வசிட்டரின் காமதேனுவைக் களவாடினேன்."
"ஏ, துட்டனே! மனைவி சொல் கேட்டுக் களவு புரிந்த நீ பூமியில் பிறந்து நெடுங்காலம் பெண் உறவு அற்று வாழக்கடவாய். உனக்குத் துணை புரியவந்த மற்ற தேவர்கள் பிறந்ததும் இறந்து வானுலகம் அடையட்டும்." என்று
சபித்துவிட்டார்
அன்னையே! வசிட்டரின் சாபம் பெற்ற நாங்கள் உன் மக்களாய் பிறக்க விழைகிறோம்."
முனிவரின் சாபப்படி நம் மக்களாய்ப் பிறந்த ஏழு தேவர்களுமே என்னால் சாகடிக்கப்பட்டு வானுலகம் அடைந்தனர்.
"மன்னா! இப்பிரபாசன் நீண்ட காலம் வாழவேண்டியவன். இவனை நானே வளர்த்து உன்னிடம் ஒப்படைக்கிறேன்."
குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்ட கங்கை, கங்கையில் மறைந்து போக மன்னன் சந்தனு திகைத்து நிற்கிறான்.

தொடரும்

நீரில் குமிழி இளமை

திருவாரூர் க. சுகுமாரன், எம்.ஏ.,

மனிதனுக்குப் பகுத்தறிவு உண்டு; மனம் உண்டு; உணர்வு உண்டு. அவனுக்கு என்று உரிமை உண்டு. மனிதனுக்கு இருப்பது போலப் பகுத்தறிவு விலங்குகளுக்கு உண்டா? இல்லை. மற்ற உயிர்களுக்கு மனம் உண்டா? உண்டு. ஆனால் மனிதனுக்கு உள்ளது போல் விரிந்த அளவு மனம் பிற உயிர்களுக்கு இல்லை. மனிதனுக்கு அமைந்துள்ள உரிமைகள் வேறு, பிற உயிரினங்களுக்கு அமைந்துள்ள உரிமைகள் வேறு.

மனிதன் பகுத்தறிவைக் கொண்டு, மனத்தாலே சிந்தித்து அவனுக்கு என்று அமைந்துள்ள உரிமைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

மனித வாழ்வு செம்மைப்படுவதற்குரிய நெறி முறைகளையும், கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளையும் நம் முன்னோர்கள் தொகுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்றுக் கொள்ள வேண்டிய நீதிகள் இவை; நடைமுறைகள் இவை என ஆன்றோர்கள் வகைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை உண்மைகளைத் தொகுத்துச் சொல்லி இருப்பதுடன், சிறப்பாகவும் விளக்கமாகவும் சொல்ல வேண்டிய அவசியமான செய்திகளைத் தனித் தனியாகவும் இயம்பியுள்ளார்கள்.

மனிதனுக்கு என்று உரிமைகள் உள்ளன அல்லவா! அந்த உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு, நன்மையானவற்றை யெல்லாம் நீக்கி விட்டுத் தீமையானவற்றை அவன் செய்யக்கூடும். அப்படி அவன் செய்ய முனையும்போது, சான்றோர்களின் அறிவுரைகள் அவனுடைய மனத்திலே தங்கியிருந்து இவை நல்லவை; இவற்றைச் செய்; இவை தீயவை; இவற்றைச் செய்யாதே என்று உணர்த்தி நல்வழிப்படுத்துகின்றன.

நல்ல நண்பர்கள் அறிவுரை கூறுவார்கள்; உண்மைதான், ஆனால் நண்பர்கள் எல்லாருக்கும் கிடைப்பார்களா? கிடைக்கமாட்டார்கள். அப்படியே கிடைத்தாலும் இடம் அந்த நண்பரைப் பிரித்துவிடும். காலம் பிரித்துவிடக்கூடும். இப்படி இடமோ, காலமோ நல்ல நண்பர்களைப் பிரித்து விடக்கூடும்.

ஆனால் சான்றோர்கள் கூறிய அறிவுரைகளை இடம் பிரித்து விடுமா? காலம் பிரித்துவிடுமா? இடமோ காலமோ பிரித்துவிடாது. நல்ல நண்பர்கள் கிடைத்தாலும் வேண்டிய சமயத்தில் நமது உதவிக்கு அவர்களால் வரமுடியாமல் போகக்கூடும். ஆனால் சான்றோர்களின் அறிவுரைகள் நிறைந்த நூல் நம்மிடமே இருக்கும். எப்போது வேண்டுமானாலும் அந்த நூல்கள் நமக்குப் பயன்படும்.

குமரகுருபரர் அருள் நூல்களையும், பக்தி நூல்களையுமு நமக்குத் தந்துள்ளார். இலக்கண நூல்களையும் அளித்திருக்கின்றார்.

மக்களுக்கு நீதிபுகட்டுவதற்காக நீதி நெறி விளக்கம் என்னும் நூலையும் அளித்துள்ளார். மக்களுக்கு வேண்டிய நீதிகளைத் தொகுத்துச் சொல்லும் திருக்குறள் கருத்துக்களையொட்டிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒரு நூல் இயற்றித் தருமாறு குமரகுருபர சுவாமிகளை மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்க மன்னர் வேண்டிக் கொண்டார். அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காகவும் குமர குருபர சுவாமிகள் நீதி நெறி விளக்கத்தைப் பாடினார்.

சமுதாயத்திற்கு வேண்டிய நீதிகளைச் சொல்லும்போது, செய்தே ஆகவேண்டும் எனக்கட்டளை இடுவதாக நீதி நூல்கள் அமைந்திருக்கும். பயன் படக்கூடிய நீதிகளைச் சொல்லும்போது, செய்யலாம் என்று சொல்லாமல், செய்தே ஆக வேண்டும் என்று உத்தரவு இடுவதாக அமைந்திருக்கும். இலக்கிய நூல்கள் செய்திகளைச் சொல்லிக் கொண்டு போகும். புராணங்கள், இதிகாசங்கள் முதலியன வரலாறு, கதை ஆகியவற்றைச் சொல்லும். நீதி நூல்கள் நீதிகளைச் செய்தே ஆக வேண்டும் என்று கட்டளை இட்டு வற்புறுத்தும்.

மனித வாழ்க்கை பயனுள்ள முறையில் அமைவதற்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நீதி நெறிகள் எண்ணிக்கையில் அடங்காமல் பல உண்டு. அவற்றுள் மிக இன்றியமையாதவற்றை நீதிநெறி விளக்கத்தில் ஸ்ரீகுமரகுருபரர் எடுத்து விளக்கியுள்ளார். கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல்:

> ''நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
> நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
> எழுத்தாகும் யாக்கை, நமரங்காள் என்னே
> வழுத்தாதது எம்பிரான் மன்று''

இளமைப் பருவம். நீரில் தோன்றுகின்ற குமிழிக்கு நிகர் ஆகும். தண்ணீரில் குமிழி தோன்றும்; தோன்றிய உடனேயே அழியும்; நிலைத்து நிற்காது. அதுபோன்றதுதான் இளமைப்பருவமும்.

உலகத்தில் குழந்தையாகப் பிறக்கின்றார்கள். ஆயினும் யாரும் குழந்தையாக இருக்க விரும்புவதில்லை. பின்னாளில் துன்பப்படுகின்றபொழுது, 'குழந்தையாக இருந்திருந்தால் இவ்வளவு துன்பம்

வந்திருக்காதே!'' என்று நினைத்து வருத்தப்படு வார்கள். ஆனால் குழந்தைப் ப்ருவத்திலேயே இருப்பதற்கு யாரும் விரும்பமாட்டார்கள்.

குழந்தைப் பருவத்திலேயே இருப்பது இயற்கைக்கு முரணானது ஆகும். குழந்தைப் பருவத்திலேயே இருப்பது இயற்கை நியதியும் அன்று. குழந்தைப் பருவத்தில் ஏற்பட வேண்டிய மாறுதல்கள் ஏற்பட்டே ஆக வேண்டும். அவ்வாறு ஏற்படாத உடம்பு குற்றமுடைய உடம்பேயாகும்.

குழந்தைப் பருவம் மாறி இளமைப்பருவம் வருகிறது. இளமைப்பருவம் நிலைத்து இருக்க வேண்டும் என்று ஆண் பெண் இருபாலரும் விரும்பு கின்றார்கள். ஆனால் இளமைப்பருவம் நிலைத்து இருக்கக் கூடியதா? இல்லையே! இளமை நிலையில்லாதது என ஆன்றோர் அனைவரும் இயம்பி யுள்ளனர். சிறிது காலம் மட்டுமே, வரையறுத்த காலம் வரையிலுமே தங்கியிருக்கக்கூடியது இளமை. இளமைப்பருவம் எந்நாளும் நிலைத்திருக்கக் கூடியது என்று நினைப்பது அறியாமையாகும்.

நீர்க்குமிழி எவ்வாறு தோன்றியவுடனே அழி யுமோ அதுபோன்று இளமைப் பருவமும் நிலைத்து நிற்காமல் அழிந்து விடும். எனவே தெரிந்த உதா ரணத்தைக் கொண்டு இங்கே குமரகுருபரர் உண் மையை விளக்குகின்றார்.

''நிறை செல்வம் நீரில் சுருட்டும் நெடுந் திரைகள்'' நிறைந்த செல்வம் தண்ணீரில் காற்றி னால் சுருட்டப்படும் பெரிய அலைகள் ஆகும். ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம் என்பது ஆன்றோர் கொள்கை. காட்டாற்றில் திடீர் என வெள்ளம் வரும். அப்படி வரும்போது அது மண்ணை அரித்துக் கொண்டு வந்து ஓர் இடத்தில் மேடாக்கும். அடுத்து வருகின்ற வெள்ளப் பெருக்கு அந்த மேட்டை அடித்துக் கொண்டு சென்று ஆழமான பள்ளமாக்கி விடும்.

அதே போன்று ஏராளமான செல்வம் ஒருவ ருக்கு வந்து சேரும். எப்படி திடீர் என்று வந்ததோ அதே முறையில் திடீர் என்று அந்தச் செல்வம் மறைந்து போகும். முறையாகத் தேடு கின்ற செல்வந்தான் அளவோடு வரும். சிறுகச் சிறுக வந்து பெருகும். முறையற்ற செல்வம் திடீர் எனத் தோன்றி வந்து பெருகும். நியாயமான முறையில் செல்வம் தேடுகின்ற ஒருவருக்குத் திடீ ரென்று அதிகமாக பணம் வந்து சேருவதற்கு நியாயம் இல்லை.

தண்ணீரில் அலைகள் உண்டாகின்றன. அந்த அலைகள் காற்றினால் ஏற்படுகின்றன. தண்ணீரில் அலைகள் தோன்றும்; பிறகு மறையும். இவ்வாறு அடிக்கடி தோன்றித் தோன்றி மறையும் இயல்பு உடையவை அலைகள்.

அதே போன்று செல்வம் ஒருவருடையகைக்கு வரும். அதே போன்று கையைவிட்டு நீங்கும். சக்கரக்கால் போல மாறி வரும் செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. வண்டிச் சக்கரம் மேலும் கீழுமாக மாறி மாறிச் சுழலும். செல்வம் ஒரு சமயம் வரும். பிறிதொரு சமயம் போகும். கடல் அலை நிலையில்லாதது. அதைப் போல் செல்வமும் நிலையில்லாதது. செல்வத்தையே பெரிது என்று நம்புவதில் ஒரு பயனும் இல்லை. அழியக்கூடியது. எனவே, செல்வம் நமக்கு தக்க சமயத்தில் உதவும் என எண்ணுவது அறியாமை யாகும்.

''நீரில் எழுத்தாகும் யாக்கை'' நீரில் எழுதப் பட்ட எழுத்துக்கு நிகர் உடம்பு என்பதாகும். ''கல்மேல் எழுத்துப்போல் காணுமே''-என்பது சான்றோர் வாக்கு. எழுதப்பட்ட எழுத்து சிறிதுகாலம் அழியாமல் இருக்க வேண்டுமானால் கல்லின் மேல் எழுதப்பட்டிருக்க வேண்டும். கல் லின்மேல் எழுதப்பட்ட எழுத்து அழியாது தெளி வாகத் தெரியும். நிலைத்து நிற்கும்.

நீரில் எழுத முடியாது. கைவிரலால் எழுத முயலுவார்கள். எழுதுகின்றவர்க்குத் தாம் இன்ன எழுத்து எழுதுகிறோம் என்னும் உணர்வு இருப்ப தால் எழுதுகின்ற எழுத்தின் வடிவம் மனத்தில் தோன்றும். ஆனால் மற்றவர்களுக்கு எழுத்தின் வடிவம் கண்ணுக்குத் தெரியாது. நீரில் எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே அது அழிந்துகொண்டே வரும். யாக்கையாகிய உடம்பின் நிலையும் அப் படித்தான். தோன்றுகின்ற பொழுதே அழியும் தன்மையுடையது உடம்பு. உடம்பைப் பெறுவது நம்கையில் இல்லை. அவரவர் விருப்பப்படியே உடம்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்றால், உறுப்புக்குறைபாடு உள்ள உடம்பைப்பெற யாரும் விரும்பமாட்டார்கள். ஏழ்மை நிலையில் பிறப்பு எடுப்பதையும் விரும்புபவர்கள் இரார். எனவே உடம்பு வாய்ப்பது என்பது நம் கையில் இல்லை.

வினைப்பயன் காரணமாகக் கிடைக்கக்கூடிய உடம்பு, அழியாமல் நிலைத்து நிற்பது என்பதும் நம் கையில் இல்லை. தோன்றுகின்ற சமயத்தி லேயே அழியும் தன்மையுடையது உடம்பு. உடம்பு எந்நாளும் அழியாமல் நிலைத்து இருக்கும் என்று எண்ணுவது அறியாமையாகும். உடம்பின் மீது நம்பிக்கை வைத்துப் பயனில்லை. உணவு உட் கொள்ளுவதும், மருந்து சேர்த்துக் கொள்ளுவதும் பெற்றிருக்கின்ற உடம்பைப் பேணிக் கொள்ளு வோம் என்னும் கருத்தில்தான்.

நீரில் எழுத்து எப்படி மறைந்து போகுமோ அது போன்று நமது உடம்பும் மறைந்து போகக் கூடியதுதான். எனவே இளமை நிலையில்லாதது. செல்வம் நிலையில்லாதது; யாக்கையாகிய உடம்பு நிலையில்லாதது. அழியக் கூடிய இவற்றை நம்பிப் பயனில்லை. உலகத்தில் தோன்றுகின்ற பொருள் களெல்லாம் அழியக் கூடிய இயல்பு உடையவை. எந்தப் பொருள் தோற்றத்திற்கு வருமோ அந்தப் பொருள் அழியும் தன்மை உடையது. இறைவன் தோற்றம் இல்லாதவன். தோற்றமும் அழிவும் இல்லாத பரம்பொருளே உயிர்களுக்கு உறுதி தருவது.

'நமரங்காள்! என்னே வழுத்தாதது எம்பி ரான் மன்று'' அன்பர்களே! உலகம் நிலையற்ற தென நீங்கள் உணர்ந்திருந்தும் எம்பெருமான் நடராஜ பெருமான் திருநடனமிடும் பொன்னம் பலத்தினைப் போற்றி வணங்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? சொல்லுங்கள்.

இளமையையும், நிறைந்த செல்வத்தையும், யாக்கையையும் நம்பிப் பயனில்லை. இவையெல் லாம் அழியும் முன்பே, அழியாப் பரம்பொருளை வாழ்த்தி வணங்குங்கள் என்கிறார் குமரகுருபரர்.

— — — —



வித்யா தீர்த்ததாசன்

மகளிர் விளையாட்டை வைத்து இறைவனை கவிபாடி வணங்கும் மரபைத் திருவாசகம் ஏற்படுத்தியது. திருப்பொன்னூசல் அம்மானை போலத் திரு எம்பாவையும் உள்ளது. திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன்பு மகளிர் காலையில் எழுந்து சிவபெருமானையும் அம்மையையும் பாடிக் கொண்டுபோய் நீர் நிலையில் நீராடி திருக்கோயிலை வழிபட்டு வீடு திரும்புதல் நற்பயன்தரும். மழை பொழியும். நல்ல கணவன் கிடைப்பான் என்பது மார்கழி நோன்பிருக்கும் பாவைமார் நம்பிக்கை. இது திருவாதிரையுடன் முடியும்.

மார்கழி திங்கள் தன்னில் ஆதிரைமுன் ஈரைந்தே ஆகிய
தினங்கள் தம்மில் மேதகு மனைகள் தோறும் அமைந்திருள்
விடிவதான போதினில் தம்மில் கூடிப்புனல்தடம் ஆடல் செய்வர்''

என்று வாதவூர்ப் புராணம் கூறுகிறது.

இதைக் கார்த்யாயனி விரதம் என ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. திருவெம்பாவையில் நோன்பு என்றோ விரதம் என்றோ எந்தக் குறிப்புமில்லை. இதைத் தை நீராடல் என அழைப்பர். திருவாதிரைப்பற்றி நான்காம் திருமுறையில் ஒரு பதிகமே காணப்படுகிறது. ஒன்பதாம் திருமுறையும் திருவெம்பாவைபற்றிப் பாடுகிறது. இது நவசக்திகளை அழைப்பதாகவும் சிலர் கூறுவர்.

எல்லாத் திருமுறைகளும் இறைவனை அம்மையப்பனாகவே பாடியுள்ளன. திருவெம்பாவை மட்டும் 'பேதித்து வளர்த்த பெய்வளை' என்பன போன்ற சொற்களைப் பெய்திருப்பதால் சக்தியை வியந்தது எனக்கூறுவர்.

1. ஏதேனும் ஆகாள் கிடந்தாள்

இதில் சோதி, அண்ணாமலையான் என்ற சொற்கள் வருவதால் இது திருவண்ணாமலையில் பாடப் பெற்றிருக்கலாம் என வாதவூர்ப் புராணமும் நம்பி திருவிளையாடலும் கூறுகின்றன. தில்லையிலிருந்து கொண்டே ஏனைய தலங்களையும் பாடினார் என்றும் கூறுவர்.

சூரியன் - சுடர்-நெருப்பு இவற்றையும் சோதி என்றே கூறுவர். இவை அறிவும் கருணையும் அற்றவை. சூரியனின் ஒளி சிறிது சிறிதாகக் குறைந்து கடைசியில் அழிந்து மறையும் என்று கூடக் கூறுவர். சூரியன் படைக்கப்பட்டவன். எனவே அழிவு உண்டு. விளக்கு என்னும் சுடர் எண்ணை இல்லாவிட்டால் அணையும். விறகு தீர்ந்தால் அணையும் நெருப்பு.

மனிதனின் அறிவு என்ற சோதி ஆணவமயத்தால் மறைக்கப்பெறும். எனவே சிறுசோதி (சிற்சோதி) என்பர். இறைவன் அவ்வாறு இல்லாத பெருஞ்சோதி. அறிவே (ஞானம்) உருவானவன். அறிவுக்கு ஆதி அந்தம் கிடையாது. எளிதினால் கிடைக்காத தியானத்தினால் மட்டும் கிடைக்கும் அருஞ்சோதி. அறிந்தவருக்குக் கனி போன்றவன். ஏனையவருக்கு உயர்ந்த மாணிக்கமாலை போன்றவன். எனவே ஆதியும் அந்தமில்லா அரும் பெருஞ்சோதியை நாங்கள் பலரும் (யாம்) பாடக்கேட்டும் தூங்குகிறாயா? தூங்கினால் காது கேளாது. தூங்காத சோம்பல் நிலை என்பது குறிப்பு. வாள் போன்ற கண்களையுடைய மாதே! (பெரிய பெண்ணே! என்பதால் பாவைப் பாடல்களைச் சிறிமியர் மட்டும் பாடினர் என்பது பொருந்தாது) கண்வளர்தல் என்பது தூக்கத்திற்கு உபசாரவழக்கு; கேலி செய்கின்றனர். எங்கள் பாடலைக் கேட்டு இன்பமுறாத செவியா உன் செவி! பாட்டுக்காக இல்லாவிட்டாலும் பாடப்படுவது இறைவனைப் பற்றி என்பதற்காகவாவது எழ வேண்டாமா? என்கின்றனர்.

நாங்கள் சிறு தெய்வத்தையா பாடுகிறோம்? மாதேவன் என்ற தெய்வத்தின் திருவடிகளை; பிறவியையொழித்து முத்திகொடுக்க யானே வல்லவன் எனக் காட்டும் வகையில் காலில் வீரக்கழல் அணிந்த தெய்வமன்றோ? நோய் முதலானவற்றை ஒழித்துப் பகைவர் எங்கிருந்தாலும் சென்று ஒழித்துவிடக்கூடிய திருவடிகள். ஊழ்வினையை ஒழித்துவிடும் கழல்கள்; இருகழல்களில் ஒன்று நம் பாவபுண்ணியங்களை மறைத்து வைக்கும். மற்றொன்று அருள் செய்யக்கூடியதானபடியால் அருள் செய்யும் திருவடியைக் குறிக்கும் முறையில் வார்கழல் எனக் கூறினார். நாங்கள் அத்திருவடியை வாழ்த்தினோம். இறைவனது பெருமையை

உணர்ந்து பாடிய பயன். கேட்டவருக்கு மந்திரங்களைக் கேட்டமாதிரியான பலன். யாவருங்கேட்டு உய்ய வேண்டுமென வீதிவாய்ப் பாடினர். யாவரும் கேட்ட அந்த வாழ்த்தொலி வீட்டில் படுத்து உறங்கிய இவளுக்குச் சாளரம் மூலம் கேட்டது. நல்ல சொல் கேட்டலும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உணர்ச்சி வசப்படாமல் மென்மை, வெண்மை வாசனை, குளிர்ச்சி அழகுடன் கூடிய படுக்கையிலிருக்கிறாளே! கீழே விழுந்து உடம்பை மறந்து உருகிக் கிடக்க வேண்டாமோ? ஏன்இப்படி இருக்கிறாள்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்சோதியை
யாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்!
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்
தொலி போய்
வீதிவாய்க்கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே, என்னே!
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

2. இடம் மாறிய பாசம்

அடுத்த வீட்டில் படுத்துறங்கும்ஒருபெண்ணை அனைவரும் எழுப்பச் செல்கின்றனர். இரவுபகல் எப்போதும் இறைவனைப் பற்றியே பேசும் இந்த வீட்டுப் பெண் தன்னை அறியாமல் படுக்கையில் புரண்டு அயர்ந்து தூங்கிவிட்டாள். தாழ்ந்த பொருளை விரும்புவதைப் பாசம் என்பர். உயர்ந்த பொருளில் வைக்கும் ஆசையை நேசம் என்பர்' 'பரஞ்சோதியான இறைவன் மீது நேசம் வைக்காது படுக்கையின்மீது நேசம் வைத்து விட்டாயே!'' என்கின்றனர். நல்லது செய்யாவிட்டால் பரவாயில்லை. கெட்டது செய்யாமலிருக்கலாமே! இறைவன் மீது நேசம் வைக்காமல் படுக்கையின் மீது நேசம் வைத்துவிட்டாயோ? (வைத்தனையோ) எனச் சந்தேகமாகவே கேட்கின்றனர். நேரிழையாய்! தேவையான ஆபரணங்களை அணிந்தவளே! என அழைக்கின்றனர். பெண்கள் மிதமாக ஆபரணமணிய வேண்டும் என்றும் தூங்கும்போது மங்களகரமான ஆபரணங்களை கழற்றக்கூடாது என்பதும் குறிப்பு.

பரமனுக்கு வைக்க வேண்டிய நேசத்தைப் படுக்கையின் மீது வைத்துவிட்டாயோ எனக் கேலி செய்ததைக் கேட்ட அந்தப் பெண் எழுந்து பேசுகிறாள். 'கண்ணியமான முறையில் எழுப்பியிருந்தால் உங்களது சிவசின்னம் தரித்த தன்மை கண்டு சிவநேசச் செலவிகளே என அழைத்திருப்பேன். இறைவன் புகழைப்பாட ஆரம்பித்த நேரத்தில் கேலி செய்வதால் 'வெளிக்கு அழகு காட்டும் ஆபரணங்களையணிந்த நேரிழையர் என அழைக்கிறேன்' என்கிறாள். சிவனடியார்கள்வாயில்கெட்ட சொல்லே வராது. நேரிழையர் என அழைத்ததில் ஞானம் - பக்தி - வைராக்கியம் ஆகிய குணங்களான ஆபரணங்களையணிந்தவர்கள் என்ற தொனிப் பொருள் கிடக்கிறது.

''சீசிஇவையும் சிலவோ?'' சிலவார்த்தைகள் தான் சொன்னீர்கள். 'விட்டால் மேலே மேலே ஏதாவது பேசுவீர்கள் போலிருக்கிறதே'' என்கிறாள்.

நாராயணனே நமக்கே பறைதருவான் என்ற திருப்பாவை இரண்டாவது பாடலில் நாராயணாய நம என்ற எட்டெழுத்து மந்திரத்தை மறைத்து வைத்தாள் ஆண்டாள். அதுபோல இங்கு பஞ்சாட்சரத்தை மறைத்து வைத்திருக்கின்றார் மணிவாசகப் பெருமான் என்பது ஒரு அழகான நயம்.

நமசிவாய என்பது ஸ்தூல பஞ்சாட்சரம், சிவாயநம என்பது சூட்சும பஞ்சாட்சரம். சிவயசிவ என்பது காரண பஞ்சாட்சரம். ந என்பதுமறைத்தலான சக்தியையும் ம என்பது மலத்தையும் சி என்பது சிவபெருமானையும் வ என்பது அம்மையையும் ய என்பது ஆன்மாவையும் குறிக்கும் என்பர். எனவே சிவயசிவ என்பது இருதலை மாணிக்கம் என்பர். 'ய' என்ற ஆன்மாவுக்கு இருபக்கமும் அம்மையும் அப்பனும் இருபுறமிருந்து காப்பதால் இருதலை மாணிக்கம் என்பர். சிவ என்பது மகா காரண பஞ்சாட்சரம். 'சி' என்பது ஒரு மந்திரம். அதைத்திருமூலர் நாயோட்டுமந்திரம் எனக் கூறுவர். திருமூலர் தமது திருமந்திரத்துள்

'நாயோட்டு மந்திரம் நான்மறைவேதம்
நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த சோதி
நாயோட்டு மந்திரம் நாமறியோமன்றே'

என்று பாடியிருக்கிறார்.

நாயை விரட்டுவதற்குக் கூட நல்ல சொல் கூறும் நம்மவரின் பெருமைதான்என்னே! நயப்பது நாய், நயக்கப்படுவோன் நாயன் என்றும் பொருள் கூறுவர். நாய் தலைவனை அறியக்கூடிய தன்மை, தலைவனது உடைமைகளை உயிரினும் சிறப்பாகக் காத்தல், தலைவன் துன்புறுத்தினாலும், பொறுத்தல், தலைவன் ஏவியதைச் செய்தல், நன்றி மறவாமை, தலைவனுக்காகத் தன் உயிரையும் கொடுத்தல், மோப்ப சக்தி முதலானவை நாயின் நற்குணங்களாகும்.

மந்திரங்களின் மாத்திரைகளைக் கூட்டியும் குறைத்தும் ஓதும் வழக்கம் ''திருந்து நற்சி என்று உதறிய கையும்'' (திரு மந்திரம் 2751) என்பர் திருமூலர். எனினும் அதிமகாகாரண பஞ்சாட்சரமான 'சி' என்பது சபம் செய்யப்படுவதில்லை.

எனவே தன் தோழிகளை ''ச்சீ'' எனக்கூறியதிலும் சிவனடியார் இறைவனது மந்திரத்தையே கூறினார் என்பர். இறைவனை வணங்கி வழிபட்டு ஏத்தும் இப்போதில் பரிகசம் செய்வது நேர்மையா எனக் கேட்கிறாள். 'விளையாடி ஏசுமிடம்ஈதோ? எனக் கேட்டவளுக்கு ஏனையவர் பதில் கூறுகின்றனர். ''இறைவனைத் தேவர்கள் வாழ்த்துவதுகூட தமக்கு நல்வாழ்வு வேண்டும் என்ற கோரிக்கையுடன்தான்!! எனவே யாசிக்க வந்த அவர்கள் கூசிக் கொண்டே வாழ்த்துகின்றனர். இத்தகைய வானவருக்கும் அருள்புரியும் ஈசன், எந்த நோக்கமுமில்லாது பக்தி செய்வதுதான் கடமைஎனவாழ்த்துபவருக்கு தானாக நேரில் வந்து அருள் புரியும் கருணையுள்ளவன். இதைச் சேக்கிழார் 'அடியவர் மனைகள்தோறும் சென்று அவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர்'' எனக் கூறுவர். மாணிக்கவாசகரின் கதையில் அவருக்கு குருவாக வந்து அறிவு ஒளி கொடுத்தவன்-வந்திக்காக பிட்டுக்கு மண்சுமந்து தன் முதுகில் அடிவாங்கியதும்மறைந்தனன் நிறைந்த சோதி என்ற காரணம் கொண்டு-தேசன் ஒளியுள்ளவன் எனக் குறித்தார். சிவலோகன் - சுயநலமுள்ள தேவர்களின் உலகத்தில் இல்லை. தேவதேவனான அவன் சிவலோகன் என்றபடிதன் உலகிலேயே உள்ளான். நமக்காகத் திருச்சிற்றம் பலத்துள் ஈசனாக வந்துள்ளான். அப்படிப்பட்டவனுடைய கருணை எங்கே! நாம் எங்கே! எனவே உன்னைக் கேலி செய்யவில்லை. எழுந்துவா எனக்கூறி அவளை அழைத்துச் செல்கின்றனர்.

(தொடரும்)

கண்ணன் எனும் கருணைத் தெய்வம்

விசாகன்

''குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே'' என்று வழக்கொன்று உண்டு. அன்பெனும் பிடியுள் அகப்படும் தெய்வமான திருமால் குழந்தை உருவத்திலே தோன்றி விளையாடி இன்பமளித்த நாடு நம் பாரதநாடு.

பிறந்த அன்றே விளையாடினவன் குழந்தைத் தெய்வமான கண்ணன். பிறந்த குழந்தையின் கை கால்களை நிமிர்த்துச் சீர் செய்து பெரிய பாத்திரத்தில் வைத்திருந்த இளஞ்சூடான நீரைக் கொண்டு நீராட்டி, குழந்தையின் வாயில் நன்கு அரைத்த சிறு மஞ்சள் கொண்டு, நாக்கை வழித்து விட எண்ணித் தடவினாள் யசோதை. மஞ்சள் நஞ்சைக்கூட மாற்றும் ஆற்றல் உள்ளது. அன்னை வயிற்றிலிருந்தபோதே குடித்த நீர் கெடுதலைச் செய்துவிடலாம். அதற்கு நாக்கு வழித்தல் வழக்கம். குழந்தை கண்ணன் வாயைத் திறந்தபோது உலகமெல்லாவற்றையும் கண்டாளாம் யசோதை.

''கையும் காலும் நிமிர்த்திக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட
வைய மேழும் கண்டாள் பிள்ளை வாயுள்ளே''

என்பது பெரியாழ்வார் காட்டும் காட்சி. யசோதையிடம் அமுதம் உண்ட கண்ணன் வாய் திறந்து கொட்டாவி விட்ட காலத்தில் அவனது வாயில் உலகம் பூராவும் கண்டாள் என்பது சுகர் காட்டும் காட்சி.

வரதராஜர் பாகவதம் என்று ஒரு நூல் உண்டு. கண்ணனும் பலராமனும் விளையாடிய போது கண்ணன் மண்தின்றான் என அறிந்த யசோதை ''வாயைத்திற'' என்று கூறியபோது, கண்ணனது திறந்தவாயில் ''பிரமனைக் கண்டாள். உலகம் பூராவையும் கண்டாள். சூரிய சந்திரர்களையும், உலகத்திலுள்ள எட்டு மலைகளையும் ஏழுகடல்களையும், எட்டுத்திக்குகளிலும் உலகைச் சுமக்கும் யானைகளையும் கண்டாள். எட்டுதிக்குகளின் திக்குபாலர்களான தேவர்களையும், நட்சத்திரங்களையும் முனிவர்களையும் மட்டுமல்ல, இந்த பூவுலகத்தையும் அதிலுள்ள ஆயர்பாடியையும் கண்டதுடன் தன்னையும் தன் மகனான கண்ணனையும் அவனைமிரட்டத் தன் கையில் வைத்திருந்த கோலையும் கூட கண்டாள்.

பாரினைக் கண்டாள் ஆயர்பாடியில் தன்னைக்
கண்டாள்
சிறுமகனைக் கண்டாள் சிறந்ததன்கைக்
கோல் கண்டாள்

என்கிறது வரதராஜர் பாகவதம்.

கண்ணன் வெண்ணை திருடி உண்டான் என்பர். நெஞ்சு கனமான கல்லாக இருக்கக்கூடாது. அது நெகிழ்ந்து உருக வேண்டுமென்பர். நம் மனமான கல்லைக்கனிவித்து உருக்கி வெண்ணைபோல் வைத்துக் கொண்டால் நம் உள்ளத்தைக் கவர்ந்து செல்வான் கண்ணன் என்பது குறிப்பு. உள்ளம் கவர் கள்வன் என்றபெயர் கண்ணனுக்குப் பொருந்தும்.

வாமனாவதாரத்தில் மகாபலியிடம் சென்று கையேந்தி நின்றேன். இங்கு இடையர் வீட்டில் சென்று தீர்மானமாக என்னையுடையது என உரிமையுடன் எடுத்துக் கொள்வேன் என்று கண்ணன் வெண்ணை கவர்ந்ததற்குக் காரணம் கூறுவர் நாராயணீய ஆசிரியர்.

வெண்ணையைத் திருடி, முந்திய அவதாரமான இராமாவதாரத்தில் மலைகளைக் கொண்டு வந்து பாலம் அமைத்த குரங்குகளுக்கு உண்ணக் கொடுத்தான் என்கிறது ஒரு பெரியவர் வாக்கு.

கண்ணனைப் பற்றி கிருட்டிண கர்ணாமிர்தம் (செவிக்கமுதமான இன்பம் தருவது) என்ற ஒரு அழகிய நூல் உண்டு. லீலாசுகர் என்ற அந்த அடியவர் கண்ணனது சிறுபிள்ளை விளையாட்டுகளைப் பற்றிப் பல செய்திகளைச் சுவைபடக் கூறுவார். சில காண்குதும்.

''அம்மா'' என அழைத்தான் கண்ணன்.
''என்ன கண்ணா'' என்றாள் யசோதை.
''கிண்டியைக் கொண்டுவா'' எனக்கேட்டான்
கண்ணன்.
''கிண்டி இப்போது எதற்கு?'' என்றாள்
யசோதை.

''பால்குடிக்கத்தான்'' எனக் கண்ணனிடமிருந்து பதில் வந்தது. பால் இப்போது கிடையாது எனக் கூறிய யசோதையிடம் ''எப்போது கிடைக்கும்'' எனப்பதில் கேட்டான் கண்ணன். ''இரவில் தான் பால் கிடைக்கும்'' என்றாள் யசோதை. ''இரவு எப்போது?'' என்று மீண்டும் கேட்ட கண்ணனுக்கு ''இருட்டியபிறகு தான் இரவு வரும்'' எனப் பதில் சொன்னாள் யசோதை. திடீரெனக் கண்ணன் கண்களை மூடிக்

கொண்டு ''அம்மா இருட்டுவந்து விட்டது பால் கொடு'' எனக் கூற, கண்ணனின் செய்கையைக் கண்டு குபீரெனச் சிரித்தாளாம் யசோதை.

ஒரு வீட்டுக்குள்ளே சென்று கண்ணன் வெண்ணையை உறியிலிருந்து திருடுவதைக் கண்ட ஒரு இடைப்பெண் ''யார் நீ'' எனக் கேட்க ''பலராமனின் தம்பி'' என்றான். இங்கு எங்கு வந்தாய் எனக்கேட்க ''என் வீடு என எண்ணி உள்ளே நுழைந்தேன்'' எனப்பதில் வந்தது. உறியிலே ஏன் கைவைத்தாய்? எனக்கேட்க ''என் கன்றுக் குட்டிகளில் ஒன்றைக் காணோம். அதைத் தேடுகிறேன்'' எனக்கண்ணன் பதில் கூற அந்தப்பெண் சிரித்துவிட்டாள்.

இவ்வாறு பெண்கள் கண்ணனின் விளையாட்டில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்என்பதை

''இறைவனே நீ செய்யும் தயிர் வெண்ணைக் களவில்
இறையேனும் கோபியர் தாம் மனச் சினமும் அடையார்
குறையாகும் துயருமிலர்; நீ அவர் தம் மனமும்
கொள்ளையிட்டு ஆனந்தக் கடலாழ்த்தித் திகழ்ந்தாய்''

என்கிறார் நாராயணீய ஆசிரியர்.

கண்ணனாக அவதரித்தும் முன் அவதாரமான இராமாவதாரச் செய்திகளைக் கண்ணன் மறக்கவில்லை என்கிறார் லீலாசுகர்.

கண்ணனைத் தொட்டிலிட்டு அவன் தூங்குவதற்காக இராமாயணக் கதை கூறுகிறாள் யசோதை. கண்ணன் ''உம், உம்'' என்று கேட்டுக் கொண்டே வருகிறான். ''இராமர் என்று ஒருவர் இருந்தார்'', ''உம்'' எனக்கேட்டான் கண்ணன். அவன் மனைவியின் பெயர் சீதை. ''ஊம்'' ''தந்தையின் சொற்படி நாடாள வேண்டிய நல்ல தினத்தில் காடு சென்று பஞ்சவடியில் வசிக்கும் போது சீதையை இராவணன் எடுத்துச் சென்றான்'' என யசோதை கதையைத் தொடரும்போது, குழந்தையான கண்ணன் கண் விழித்து ''இலக்குவா வில் எங்கே! வில் எங்கே எனக் கேட்டான்'' என்கிறார் லீலாசுகர்.

கண்ணன் விளையாட்டுக்களிலும் அழகிலும் மயங்கி இடைப்பெண்கள் தயிர் அல்லது மோர் விற்கும் போது கூட ''மோர் வாங்கலையா? தயிர் வாங்கலையா?'' எனக் கூவுவதற்கு பதில் ''கோவிந்தன், தாமோதரன், மாதவன் வாங்கவில்லையோ'' எனக் கண்ணனின் நாமத்தையே கூறினார்கள் என்கிறார் லீலாசுகர்.

அருச்சுனன் ஒரு சமயம் சிவபூசை செய்ய விரும்பியபோது கண்ணன் திருவடிகளிலேயே சிவ நாமங்கூறி மலர்களைவிட அவை சிவபெருமானைத் திருப்தி செய்தன என ஒரு வரலாறு உண்டு.

அது போல லீலாசுகர் ''நாங்கள் சிவ பெருமானது ஐந்தெழுத்தையே ஜபம் செய்கிறோம். ஆனால் எங்களைக் கண்ணன்தான் காக்கிறார்'' எனக் கூறுகிறார்.

கண்ணனது அழகில் ஈடுபட்ட இராமனடியார் ஒருவர் ''இராமா'' உம்கையிலிருக்கும் வில்லைச் சிறிது நேரம் ஒதுக்கிவிட்டு, தலையில் மயிலிறகு அணிந்து புல்லாங்குழலுடன் காட்சிதரவேணும்'' எனக் கண்ணன் காட்சியைக் கேட்டார் என்கிறார் லீலாசுகர். கண்ணனுக்குத் தூதனுப்பித்தன் குறைகளை முறையிட எண்ணினார் லீலாசுகர். கண்ணனிடமிருந்து அகலாது இருக்கும் பேறு பெற்ற புல்லாங்குழலை அழைக்கிறார்.

''கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ
திருப்பவழச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?'

என்று ஆண்டாளம்மை சங்கினிடம் கேட்ட மாதிரி ''அடி அம்மா புல்லாங்குழலே! புன்சிரிப்புடன் கூடிய கண்ணனின் உதட்டின் சுவையையறிந்த பேறு பெற்றவளே! உன்னை உதட்டினருகில் ஊதுதற்காகக் கொண்டு செல்லும்போது உனது மற்றொருபுறம் அப்பெருமானின் செவியருகில் செல்லுமல்லவா? அப்போது அவனது திருச்செவியில் எனது நிலையைக் கூறி எனக்கருள் செய்யுமாறு கூறுவாயாக'' என்கிறார்.

வடமொழியில் எழுதப்பட்ட இக்கருத்தை சமீபகாலப் புலவர் ஒருவர்

மின் விரிக்கும் புன்முறுவல் மேகவண்ணக் கண்ணன்
நன்மலர்வாய் இன்னமுதம் நாறுகுழல் நங்காய்
தென் விரிக்கும் நீ அவன் தன் செஞ்செவியின் கண்ணே
என்நிலைமை மெல்லனவே இயம்பிடுதி வாழி''

என்று பாடியுள்ளார்.

கண்ணனின் அழகிலும் அருளிலும் ஈடுபடாதவரே கிடையாது. அவனது குழந்தை விளையாட்டும், குருநாதனாக உபதேசித்த பகவத்கீதையின் வாக்கும் இந்நாட்டின் அழியாத செல்வங்களன்றோ! உலகம் கண்ணன் காட்டிய வழியில் நடந்தால் நல்ல நிலையை அடையலாம் என்பது திண்ணம். கண்ணனை வணங்கி அவனருள் பெற்று உலகம் உய்ய வேண்டுவோமாக.

கண்ணன் கழலிணை-நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்-திண்ணம் நாரணமே

—நம்மாழ்வார்

சிதக்கடலுள்ள அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் யசோதைக்கும் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே! பவளவாயீர் வந்து காணீரே!

—பெரியாழ்வார்.

செம்மலர் நோன்தாள்

புலவர் அமுதன்

சைவசித்தாந்த மெய்பொருள் உணர்த்துவன மெய்கண்ட நூல்கள். மெய்கண்ட நூல்களின் முடி மணியாகத் திகழ்வது சிவஞானபோதம். சாத்திரங்கள் இலக்கணங்களைப் போன்றவை. அவற்றுள் புனைந்துரைகட்கும் கற்பனைகட்கும் பெரிதும் இடமில்லை. சிவஞானபோதம் இலக்கண நூல்களைப் போலவே நூற்பாவடிவில் அமைந்தது. அடிவரையறைக்கு ஆட்படாமல் கருத்துக்களைச் சொல்வதொன்றே நோக்கமாகத் திகழ்வது. இங்ஙனம் இலக்கண மரபினைப் போற்றுகின்ற மெய்கண்டார் இறைவனுடைய திருவடிகளைக் குறிப்பிடும்போது செம்மலர் நோன்தாள் என்ற சொற்களால் சிறப்பித்துக் கூறுகின்றார். இந்த இனிய தொடர் திருவடிப் பெருமைகள் அனைத்தையும் உணர்த்துவதுடன் இலக்கியவழக்குகளையும் நினைவூட்டுகின்றது.

உயிர்கள் பிறவிக்கடல் நீந்தி பேரா இயற்கை பெறுவதற்கு இறைவனுடைய திருவடிகளே துணையும் புணையுமாகத் திகழ்வன. திருவள்ளுவரும் ஏழுகுறட்பாக்களில் திருவடிசேர்தலைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார். திருவடி சேர்தல் என்பது இறைவன் திருவடிகளைப் புகலடைதலைக் குறிப்பது. பெரியோர் திருவடிகளை வணங்குவதும், ஆதரவளிப்பவர் பாதுகாக்கவல்லவர் திருவடிகளை வணங்குவதும் உலகியலிலும் காணப்படுவதே.

மெல்ல வந்து என் நல்லடி பொருந்தி
ஈ என இரக்குவா ஆயின் சீருடை
முரசு கெழுதாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினும் கொடுக்கு வென்
(புறம் 73)

என்ற சோழன் நலங்கிள்ளியின் சூளுரை, தாள் பணிந்து வேண்டும் மரபினைக் காட்டுகிறது.

ஆட்சிபுரியும் அரசனுடைய குடை மக்களுக்கு நிழல் செய்வதாகக் கூறுவர். என்நிழல் வாழ்நர் என்று தன்நாட்டு மக்களைக் குறிப்பிடுகின்றான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

கண்பொர விளங்கும்நின்
விண்பொரு வியன்குடை
வெயில் மறைச் கொண்டன்றோ
அன்றே வருந்திய
குடி மறைப்பது வே (புறம்72)

என்பார் வெள்ளைக்குடி நாகனார். அவ்வாறே அடியவர்க்கு இறைவன் திருவடி, நிழல் செய்யும்.

முருகார் நறுமலர் இண்டை
தழுவிவண் டே முரலும்
பெருகாறு அடைசடைக் கற்றையினாய்
பிணிமேய்ந்திருந்த
இருகால் குரம்பை இதுநான்
உடையது இது பிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக்
கீழ்ஓர் தலைமறைவே
(தனித்திருவிருத்தம்)

என இறைவனது இணையடி நீழலில் வாழ்தலை வேண்டுகின்றார் அப்பரடிகள்.

அருளியலில் அன்றி உலகியலிலும் தாளிணைகளைப் புகலடைந்து வாழ்வதனை தாள்நிழல் வாழ்க்கை என்று கூறக்காணலாம்.

''தாள்நிழல் வாழ்க்கைப் பரிசிலர்''
''யானே பெறுக அவன் தாள்நிழல் வாழ்க்கை''
''திருந்து கழல் நோன்தாள் தண்ணிழலோமே''

என்ற புறநானூற்றுத் தொடர்கள் இம்மரபினுக்குச் சான்றாக மிளிர்கின்றன. பேராற்றலைக் கருதி அரசனுடைய அடியிணைகளை நோன்தாள் எனறும் கூறுவர்.

''பீடுகெழுநோன்தாள்'' எனவும்
''அருஞ்சமம் கடக்கும் ஆற்றலவன்
திருந்து கழல் நோன்தாள்''

எனவும் சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர்.

''தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தம்கடன் ஆவதுதான்''

என்பார் அப்பரடிகள்.

''சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்'' என்ற பழமொழியைச் சிவஞான போதவெண்பாவும் எடுத்துக் காட்டுகின்றது.

''தன்னைச் சரண்என்று தாள் அடைந்தேன்
தன் அடியடையப்
புன்னைப் பொழில்புக லூரண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினைக்
கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்க வொட்டான் சிவ
லோகத் திருத்திடுமே''

என இறைவன் தன் தாளடைந்தார்களைத் தாங்கிக் கொள்ளும் தண்ணளியினைப் பாடுகின்றார்

அப்பரடிகள். இவ்வருள் இயல்பினை ''உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்'' என்று சில சொற்களால் செவ்விதின் உரைக்கின்றது-திருமுருகாற்றுப்படை.

திருவடிகளின் செம்மை நலங்கருதிய குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து:—

''தாமரை புரையும் காமர் சேவடி'' என்று போற்றுகின்றது.

திருமுருகாற்றுப்படை ஆசிரியரோ முருகனுடைய திருவடிகளுக்கு குளத்தில் மலர்ந்த தாமரை போதாது என்று கடலில் மலர்ந்த தாமரைபோல் காட்சியளிக்கும் காலை இளம்பரிதியினை உவமை கூறுகின்றார்.

களம்பயில் நீர் கடல்மலர்வது
ஒருபரிதி எனக்கருதி
இளம்பரிதி பலமலர்ந்தால்

போல்ப உள இலஞ்சிபல'' -எனக் கடலில் எழுந்த காலையிளம் பரிதியினையும் இலஞ்சியில் மலர்ந்த தாமரைகளையும் ஒப்பிட்டுக் காண்கிறார் இயற்கைப் பாவலராகவும் திகழ்கின்ற தெய்வப் புலவர் சேக்கிழார். தாமரை புரையும் காமர் சேவடி தன்னடைந்தார்களைத் தாங்கிக் கொள்கின்ற தன்மையும் நோக்கி

உலகம் உவப்ப
வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு
கடற்கண்டா அங்கு
ஓவற இமைக்கும்
சேண் விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய

மதனுடை நோன்தாள்'' எனவரும் திருமுருகாற்றுப்படை அடிகள் ''செம்மலர் நோன்தாள்'' என்ற மெய்கண்டார் திருவாக்கிற்கு மூல இலக்கியம் என்று புகழும் வண்ணம் திகழ்கிறது.

இறைவன் திருவடிகளைத் தாமரை என்பது வண்ணம் பற்றியும், வடிவம் பற்றியும், மென்மை தன்மைபற்றியும் மட்டும் கூறப்படுகின்ற உவமை அன்று. சேயிதழ்த் தாமரை போன்றே சேவடித்தாமரையும் பேரின்பச் செந்தேன்பொழியும் என்று கூறுகின்றார் சேக்கிழார் பெருமான்.

தாமரைகளைச் சூழ்ந்து வண்டுகள் முரல்வது போலவே திருவடித் தாமரைகளைச் சூழ்ந்து முரல்கின்ற வண்டுகளும் உள்ளன. அவை இறைவனுடைய பீடுகெழு நோன்தாள்களைப் பாடுகின்ற தேடுகின்ற மாமறைகள் என்பார்.

தாமரைகள் நீரிலே மலர்வன. என்நெஞ்சமே உருகுதலின்றிக் கல்லாகக் கடினப்பட்டுக்கிடக்கின்றது. கல்லிலே கமலங்கள் எப்படி மலரும் என்று கேட்கின்றார் அருணகிரியார்.

''திணியான மனோசிலை மீது உனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ''

என்பது அவருடைய அனுபூதி உரை.

சேக்கிழார் பெருமான் இறைவனுடைய திருவடித்தாமரைகள் ''நீராய்உருகும் நீர்மை உடையார் நெஞ்சினில் மலர்வன'' எனறும் கூறுகின்றார்.

மன்பெருந்திரு மாமறை வண்டுசூழ்ந்து
அன்பர் சிந்தை அலர்ந்த செந் தாமரை
நன்பெரும்பரமானந்த நன்மது
என்த ரத்தும் அளித்து எதிர்நின்றன''

என்பது சேக்கிழார் பெருமானது சொல்லோவியம்.

செம்மலர்த்தாள் என்று கூறுவதனால் திருவடிகள் செம்மை உடையன என்பதும் உரையாசிரியர்கள் தருகின்ற நுண்பொருள் விளக்கம். இறைவனுடைய திருவடிகள் செம்மை நலந்தருவன; தொண்டரைச் செந்நெறிக்கு ஏற்றுந்தகையன என்பதும் இதனால் உணர்த்தப்படுகின்றது.

இங்ஙனம் 'செம்மலர் நோன்தாள்' என்ற செம்மொழிகள் சமயநலங் கனிந்து ஒளிர்வதோடு சங்கத் தமிழ் நலமுங்கலந்து சுடர்விடுகின்றன.

போற்றும் தகையன; பொல்லா
முயலகன் கோபப்புன்மை
ஆற்றும் தகையன; ஆறு
சமயத்து அவரவரைத்
தேற்றும் தகையன; தேறிய
தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றும் தகையன
இன்னம் பரான்தன் இணையடியே.

—அப்பரடிகள்.

நீறில்லா நெற்றிபாழ்

ஆறு மனிதனுக்கு இவ்வுலக வாழ்விற்கான வளத்தை ஊட்டுவது.

நீறு அவ்வுலக வாழ்விற்கான வளத்தை வழங்குவது.

ஆறுஇல்லா ஊருக்கு அழகில்லை ; நீறில்லா நெற்றிக்கும் அழகில்லை.

திருநீற்றுச் சிறப்பு

வித்துவான் க. செ. அருணாசலம்

நம் முன்னோர்கள் சைவ சமய ஞானம் பெற்ற அக்கால முதலே அணிந்து வந்து, அவர்கள் பின்வருவோருக்கும் அணிய வேண்டிய அவசியத்தை மிகவும் அறிவுறுத்திச் சென்ற திருநீற்றின் விளக்க மானது, இந்நாளில் மீண்டும் அருகி வருவதை யாம் அறிவோம். உயர்ந்த சைவ ஒழுக்கசீலர் களாய் விளங்கும் பெற்றோர்கட்குப் பிறந்த பிள்ளைகள் அவர்களுக்கு எதிர்மாறாய் நடத்தலை நாம் இந்நாளில் எங்கும் காண்கிறோம்.

மேலும், சைவ ஒழுக்கத்தில் தலைசிறந்த குடும்பத்திலுதித்துப் பள்ளிகளிலும் கல்லூரிகளி லும் கல்வி பயிலும் மாணாக்கர்கள் தங்கள் நெற்றி யில் திருநீறணிய நாணுகின்றனர். அங்ஙனம் அவர்கள் நாணுவதற்கு ஏற்ற காரணமும் இருக்கத் தான் செய்கிறது. மாணாக்கன் ஒருவன் நெற்றியில் திருநீறணிந்துகொண்டு பள்ளிக்குச் சென்று விட் டாலோ, வந்தது ஆபத்து! போலிச் சீர்திருத்த வாதிகளின் போதனை வலையில் சிக்கிச் சீரழிந்து விட்ட அத்தனை மாணாக்கர்களும் அவனைக் சூழ்ந்துகொண்டு படுத்துகிற பாடும், அவனை எள்ளி நகையாடலும், கூறும் வசைச்சொற்களும் எவ்வளவு? அவன் அவர்களோடு விடுபட்டாலும் போதுமே! அந்தோ பரிதாபம், பரிதாபம்! பட்டம் பெற்றுப் பதவியிலிருக்கும் (கடவுட்கொள்கையைக் காற்றில் தூற்றிவிட்ட)ஆசிரியப் பெருமகனாருங் கூட அம்மாணாக்கனைப் பார்த்து 'வாரும் ஐயா! பண்டாரமே! வேஷம் பலே பொருத்தம்' என்றும் கீழ்த்தரம் தோன்றக் கேலிக்கூத்துச் செய்வாரா னால் அடுத்தநாளைக்கே அந்த அப்பாவி மாணக்க னுடைய நெற்றியில் நீறு எப்படி ஏறும்?

சீர்திருத்தம், பகுத்தறிவு, மூடநம்பிக்கை என்ற இவற்றின் பெயரால் நமது தெய்வத்தமிழ் நாட்டை நாசப்பாதையிலே நடத்திச்செல்லும் நாத்திக நாசசக்தியின் போலிப் பிரசாரங்கள், கடவுட்கொள்கையினையும் அவரடியார்களையும் கண்டபடி மிகவும் இழிவுபடுத்தி நடத்திக்காட்டும் நாடகம் - சினிமாக்கள், அறிவுக்குப் பொருந்தாமல் ஆபாசமாக எழுதி வெளியிடும் புத்தகம் பத்திரிகை கள் இன்னும் இவைபோன்ற பிற பிற்போக்குச்சூழ் நிலைகளின் காரணமாகவும் ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று நம் சமயச் சான்றோரால் சிறப் பிக்கப்பெற்ற நமது தெய்வத்தமிழகம் திருநீற் றின் சிறப்பை யறியாமல் மறந்துவிட்டது குறித்து நாம் பெரிதும் வருந்துகிறோம். மீண்டும் விபூதி சாதனம் நல்லவிளக்கம் பெறவும், தீதகன்று உலகம் உய்வான் வேண்டியும் அப் பரமன் திருவருளை இறைஞ்சிநிற்பதன்றி நமக்கு வேறுவழியே இல்லை, நம் திருநாட்டில் திருநீற்றின் ஒளி நாளுக்குநாள் குன்றி அதனால் அந்தகாரம் (இருள்) குழுமானால்,

''திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்
...அடவிகாடே''

என்ற திருநாவுக்கரசர் எனும் அப்பர்பெருமானின் அருள்வாக்கின்படியே நாடு சுடுகாடாகிக் குடி தண்ணீருக்குங்கூட கண்ணீர்விட வேண்டிய இழி நிலை உண்மையிலே ஏற்பட்டே திரும். ஆதலின் சைவத் தமிழர்களாகிய நம்மவர்களில் பெரும் பாலோர் தெய்வநம்பிக்கையற்றோரின் தீய பிர சாரங்களை நம்பி, திருநீறணியும் நல்ல பழக்கத் தைக் கைவிட்டிருப்பது வெட்கமும் வேதனையும் கொள்ளற்குரியதாகும். குறிப்பாக, மிகப் பெரும் பகுதியும் பள்ளிகளில் கல்வி பயிலும் நம் சைவ சமய இளைஞர்கள் திருவெண்ணீறணிவதைஅறவே விட்டிருப்பது குறித்துக் கண்ணீர் சிந்துகிறோம். கலங்குகிறோம். மேலும் அவர்களை நம் சமயச் சான்றோர்களின் அருளுரை, அறிவுரை, அறவுரை களைப் படிக்கவும், கேட்கவும், நல்லொழுக்க வழியில் நடக்கவும் தூண்டுகிறோம்.

சிவநெறிச்சீலர்களாக ஒழுகும் நல்ல பெற் றோர்கள் திருநீறணியவெட்கமுறும் தங்கள்பிள்ளை களுக்கு, இளம்பருவத்திலேயே, திருநீறணிந்து அதனால் பெரும்பயன் பெற்ற நமது சமய முன் னோர்களின் உண்மை வரலாறுகளையும், திருநீற ணிவதால் பெறும்சிறப்பியல்புகளையும், அணியாத வழி வரும் சிறுமைகளையும் அடிக்கடி எடுத் துச சொல்லியும், பள்ளிகளிலோ அல்லது வேறிடங் களிலோ திருநீறுமுதலிய சிவசின்னங்களைப் பழித்து திரியும் பாவிகளுக்குச் சிறிதும் அஞ்சாமல் அணிய தக்க வகையில் நல்ல ஊக்கமூட்டியும் வரவேண்டும். இல்லையேல் உயர்ந்த சைவ ஒழுக்கத்தின் வழி வந்த குடும்பத்தில் தோன்றிய ஒவ்வொரு ஆண் மகனும் பெண்மகளும் திருநீறணியும் நல்ல பழக்கத்தை அறவே விட்டு, அதனால் பாவமும் பழியும் பெறுவதென்பது திண்ணம்.

ஆகவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களைக் குழந்தைப் பருவத்திலேயே திருநீறணிந்து வரத் தக்க வகையில் (நல்வழிகளில்) ஈடுபடுத்தி யும் திருநீற்றின் பெருமைகளை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும், தேவாரம் திருவாசகம், திருமந் திரம், திருவருட்பா முதலிய தெய்வத் திருவருள் நூல்களிலிருந்து எளிதில் பொருள்விளங்கத்தக்க இனிய பாடல்களை அவர்களுக்குக் கற்பித்தும், திருநீற்றின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறும் ஆகமம், புராணம், இதிகாசம் போன்ற வரலாற்று உண்மைக் கதைகளை எடுத்துக் கூறியும் வருவார் களேயானால், அத்தகைய பிள்ளைகள் பிற்காலத் தில் பலருடைய பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் பேர்பெறறு திகழ்வார்கள் என்பது நிச்சயம்.

வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், சாத் திரங்கள், தோத்திரங்கள், இதிகாசங்கள், புரா ணங்கள், மற்றுமுள்ள தெய்வநெறி நூல்கள் பல வும் சிறப்பித்துக்கூறும் திருவெண்ணீறு உருத்திர ராக்கம் முதலிய சிவசின்னங்களைத் தரித்துக் கொண்டு வெளிப்பார்வைக்கு, இவர் மிகவும் நல்ல வர் (சிறந்த சிவபக்தர்) என்று மதிக்குமாறு நடித்து மறைவில் தீயவழிகளில் ஒழுகித்திரியும் வஞ்சம் நிறைந்த கொடிய நெஞ்சம் படைத்த போலிவேட தாரிகள் நிச்சயமாய் சிவனருளுக்குச் சிறிதும் பாத் திரராகாமல் என்றும் நீங்காத பழி-பாவங்களுக் குப் பெரிதும் ஆளாகிப் பலகாலம் கொடிய நரகில் வீழ்ந்து கெட்டொழிவரென்பது சத்தியம். அத் தகையோரின் நிலை, கொடிய புலியானது பசு வின்தோலைப் போர்த்துக்கொண்டிருத்தலை யொக்கும். இதனை வலியுறுத்தும் பாடலொன்று வருமாறு:

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூரம் ஆமோகடலுப்பு பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்
புண்ணியரா வாரோ புகல்'' [தாம்

அந்நாளில் நம் முன்னோர்கள் விபூதி உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களிடத்தும், அவற்றை உள்ளன்போடு அணியும் சமயப்பெரியோர்களிடத்தும் பயமும் பக்தியும் கொண்டு ஒழுகியவர்களென்பதையும், தங்கள் பகைவர்களும் விபூதி உருத்திராக்கம் முதலிய சைவ அடையாளங்களைப் போலி வேடத்தில் புனைந்துவந்து தங்களைக் கொல்ல உடைவாளைக் கொண்டு தங்களுடலில் பாய்ச்சிய காலத்தும், அதனையொரு பொருட்படுத்தாமல் வரவேற்று, உடலில் உயிரானது ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்தப் பேராபத்தான நேரத்திலும், தம் மனைவி, மக்கள், சுற்றம் முதலிய தம் இனத்தவரை நோக்கி, ''உலகம் போற்றிப் புகழும் ,திருவெண்ணீற்றிடம் வைத்துள்ள அன்பை என்றும் பாதுகாத்து அதன் ஒளியை எங்கும் பரப்பி வருவீர்களாக'' என்று உபதேசித்து வீரமரணத்தை வேண்டிப் பெற்று, மறைந்து சென்ற மகான்கள் பலர் திருவவதாரஞ்செய்த தெய்வத்தமிழ்த் திருநாடு இஃதென்றால் இந்நாட்டின் பெருமையை யாம் எங்ஙனம் அளவிட்டுக் கூறமுடியும்?

இத்தகைய உண்மை வரலாற்றுச் செய்திகளை யெல்லாம் யாம் இன்றும், இனி என்றென்றும் அறிந்து அதிசயம் அடையத்தக்க வகையில் தொட்ட தொட்ட இடந்தோறும் தெய்வமணங் கமழும் திருநீற்றின் சிறப்பை எல்லாம் மிகத் தெள்ளத் தெளிவாக எடுத்து உரைக்கும் புராண நூல்களுள், திருவருள் தவநெறிச்சீலர் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்துள்ள உண்மைக்கு உறைவிடான திருத்தொண்டர்தம் சீர் பரவும் பெரியபுராணம்' ஒன்றே போதுமன்றோ!

இனி, நம் முன்னோர்கள் எக்காலப் முதற் கொண்டு திருநீற்றை அணிந்து வந்தனர் என்பதையும், அதனை அணியும்வழி வரும் அரும்பெரும் பயனையும், அணியாதவழி வரும் கேட்டையும், அணியும் சான்றோர்களைப் பற்றியும், அணிய நாணுவோர்களைக் குறித்தும் என்னென்ன வகையில் அறிவுறுத்திச் சென்றுள்ளனரோ? ஈங்கவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டு ஆராய்வோம்.

ஐங்கரப்பெருமானால் எழுதப்பெற்றதும், ஐந்தாம் வேதமென ஆன்றோர்களால் புகழப் பெற்றதும், இதிகாசங்களுள் ஒன்றானதும் ஆன மகாபாரதத்தை முதன் முதலில் வடமொழியில் அருளிச்செய்த வேத வியாசரும் விபூதி அணிபவரென்பதை,

'தொழுது நெற்றியின் விபூதியால் அன்னை
யின் துணையடித்துகள்
விழுதுடைத்தனி யாலெனவிருந்ததொல்
வியாதனை முகநோக்கி''

எனவரும் வில்லிபாரதம் (சம்பவச்சருக்கம், 10வது பாடலின்) வாயிலாகவும்,

''பூதி நலந்திகழ் பூரு குலத்தோர்க்கு
ஆதிப னாகி அனங்கனை வென்றோன்''

என வரும் வில்லிபாரதம் வாரணாவதச் சருக்கம், 95வது பாடலின் மூலமாகவும்,

''ஆசினான் மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின் படியுமெழுத் தைந்துங் கூறிப்
பூசினான் வடிவமெலாம் விபூதி யாலப்
பூதியினைப் புரிந்தசடைப் புறத்தை சேர்த்
தான்''

என்று வரும் வில்லிபாரதம்அருச்சுனன் தவநிலைச் சருக்கம், 37வது பாடலால் பாரத காலத்திலும்,

''இராவணன் மேலது நீறு'' என்ற திருஞானசம்பந்தமூர்த்திகளின் தேவார அடியால் இராமயணகாலத்திலும்,

''உண்மாசு கழுவுவது நீறென்றே உபநிடதம்
உரைப்பக் கேட்டும்
மண்மாசு படப்பூசும் வடிவுடையார்''

என்று வரும் விருத்த குமார பாலரான படலம் 16வது பாடல் மூலமாகத் திருவிளையாடல் புராண காலத்திலும்,

........''விதியினாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்
என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை
செய்தார்''

என்று வரும், (மெய்ப்பொருள் நாயனார் புராணம் 22வது பாடலின் வாயிலாகப் பெரியபுராண காலத்திலும்,

''சென்று கிழவோன் குறவர் செம்மலெதிர்
நண்ணி
நின்று பரிவோடு திருநீறு தனைநல்கி''

என வரும் - கந்தபுராணம் (வள்ளியம்மை திருமணப் படலம், 95வது பாடலின்) மூலமாகக் கந்தபுராண காலத்திலும், திருநீறணியும் நல்ல பண்பு நமது பரந்த பூமண்டலம் முழுதும் பரவியிருந்த உண்மைச் செய்திகளை எல்லாம் நாம் ஒருவாறு அறிந்து பெரிதும் உள்ளம்மகிழ்கிறோம்.

நமது சைவசமயம் தழைக்கத்தோன்றிய தாயருள் ஒருவரும் 'அம்பொன்மணிநூல் தாங்காது அனைத்து உயிர்க்கும் அருள்தாங்கி ''திருவதிகை திருத்தலத்தில் சிவப்பணியாற்றிய அன்னை திலகவதியார், தம் அருமைத் தம்பியார் மருள்நீக்கியாரைப் பொய்ப் புறச்சமயப் படுகுழியினின்றும் சைவசமயக் கரையேற்றவும், அவருடைய கொடிய சூலைநோயைப் போக்கவும் வேண்டி, கயிலைக்குன்றுடைய கண்ணுதற் கடவுளின் திருவெண்ணீற்றைத் திருவைநதெழுத்தை ஓதிக் கொடுக்க அப்பொழுது வாகீசர் அத்திருநீற்றைத் தமக்குப் பெருவாழ்வு வந்ததெனப் பாவித்துப் பணிந்து, பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏற்றுத் தம்முடல் முழுவதும் அணிந்து கொள்ள, அதனால் உள்ளிருள் நீங்கப்பெற்று, பதிஞானம்மேலிட்டு, திருவதிகைநாதன் திருவருளாலே, ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' என்று தொடங்கும் தேவாரத்திருப்பதிகம் ஓதி, ஒருவராலும் ஒழிக்கமுடியாத குடர்நோயான கொடிய சூலைநோய் ஒழியப்பெற்று அன்று நாவரசர் அடைந்த நற்பேற்றுக்குக் காரணமாயிருந்தது தபோதினியாரான திலகவதித் தாயார் அளித்த திருநீறன்றோ!

நமது சைவசமயம் காத்த தாயருள் ஒருவரும், தெய்வச் சேக்கிழாரால்,

''மங்கையர்க்குத் தனியரசி யெங்கள் தெய்வம்
''தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை''
''பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரை''

என்றெல்லாம் போற்றிப் புகழப்பெற்றவருமான பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கி, பாண்டிநாடு போந்து, சமணமதச் சார்பிலிருந்துகொண்டு, சைவசமயத்திற்கும் திருத்தொண்டர் குழாத்துக்கும் தீச்செயல்புரிந்த மன்னன் கூன் பாண்டியனுடைய வெப்புநோய் விலகிப்போகவும், அவன் அறியாமை அகன்று,

உண்மை நெறியுணர்ந்து சைவசமயமே மெய்ச் சமயமென்று மீண்டும் அதனைத் தழுவவும், அம் மன்னன் மட்டுமல்லாமல் உலகமெலாம் ஓதி உய் யும் பொருட்டே,

''மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தர மாவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு;
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான்
திருநீறே''

என்ற திருநீற்றுப் பதிகத்தை அருளிச் செய்த திரு ஞானசம்பந்தப் பிள்ளையாரின் சிறப்பை இவ் வுலகம் உள்ளவரையும் எடுத்துக்காட்டுவது அந்த ஞானக் குழந்தையார் அன்று அம்மன்னனுக் களித்த அந்தப் புண்ணியத்திருநீறுதானே!

தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி சுவாமி களின் உயிர்த்தோழரான சேரமான் பெருமான் நாயனார், ஓர்நாள், யானையிலமர்ந்து நகர்வலம் வருங்கால், வண்ணான் ஒருவன் உவர்மண் பொதி யைச் சுமந்துகொண்டு எதிரில்வர அதுசமயம் சற்றுநேரத்திற்குமுன் பெய்த மழையில் நனைந்த தால் உவர்மண் கரைந்து அதனால் அவன் உடல் முழுவதும் வெளுத்துத் தோன்ற அதனை முழுநீறு பூசிய திருவேடமென்று கண்டு உடனே யானை யினின்றும் கீழிறங்கி விரைந்து சென்று வணங்கி நின்றதைப் பெரியபுராணம் கூறுகிறது.

''சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை
கலங்கிமுன்வணங்கி
யாரென் றடியேனைக் கொண்டது அடியேன்
அடிவண்ணானென்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேனென்று
திருநீற்றின்
வாரவேட நினைப்பித்தீர்! வருந்தா தேகு
மெனமொழிந்தார்''

(பெரியபுராணம்-சேரமான் பெ.நா.பு.19)

இவ்வாறு சேரமன்னர் வணங்கி நிற்கக் கண்ட வண்ணான், தனது உள்ளம் மிகவும் கலங்கி, உடல் நடுங்கி, அச்சம் பெரிதும் அடைந்து அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அடியேனை யார் என்று கொண்டீர்! அபசாரம், அடியேன் அடி வண்ணான் அன்றோ! என அவன் தன்னை இன்னா னென்று அறிமுகப்படுத்திய பொழுதும், அச்சேரர் பெருமான் லட்சியம் செய்யாமல் அடக்கத்துடன் 'அடியேனும் அடிச்சேரன் அன்றோ! நீவிர் இப் பொழுது திருநீற்றின் அன்பு வேடத்தை அறிமுகப் படுத்தினீர். இனி வருந்தாது ஏகுவீராக'', என்று அன்புகனிந்து அருள்செய்த சேரமான் பெருமாள் நாயனாரின் திருநீற்றுப் பத்தியை யான் என் னென்று இயம்புவது?

அரிமர்த்தன பாண்டியன் அமைச்சராதியோர் சூழ ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கின்றான். அவ் வமயம் குதிரைக் காப்பாளர்கள் அரசவையில் நுழைந்து மன்னவனைப் பணிந்து ''மன்னர்மன்ன! நமது குதிரைப்படையில் இறந்தவைபோக எஞ்சி யுள்ளவையும், நெடிது மூப்பையுடையனவாயும் நோய்வாய்ப்பட்டனவாயுமுள்ளன. ஒரு குதிரையும் நல்ல நிலையில் இல்லை' என்று சொல்ல கேட்ட மன்னன் முதலமைச்சராகிய தென்னவன் பிரம ராயன் என்ற பட்டப்பெயருடைய திருவாதவூரரை நோக்கி, நமது கருவூலத்தைத் திறந்து வேண்டிய பொருளை எடுத்துச்சென்று, கீழ்க்கடல் துறையில் வந்திறங்கும் குதிரைகளுள் நல்லனவற்றைத் தேர்ந் தெடுத்து வாங்கிவாரும்' என்று கட்டளையிட திருவாதவூரரும் நிதியறையைத் திறந்து வேண்டிய மட்டும் பொருளையெடுத்து ஒட்டகத்தின் மீது ஏற்றி அனுப்பிவிட்டு, அதன்பின்பு அங்கயற் கண்ணி அம்மையாரின் ஆலயத்தை அடைந்து, பொற்றாமரை வாவியினுள் மூழ்கியெழுந்து, சித்திஜங்கரரைச் சேவித்து, அன்னைமீனாட்சிதேவி யின் திருவடிகமலங்களை அஞ்சலி செய்து, அப்ப னுடைய திருமுன்னிலையை யடைந்து, இருகரங் களையும் உச்சிமேல் குவித்து வணங்கி, ''வெள்ளி யம்பலத்துள் திருகூத்து செய்யும் வள்ளால், இப் பொருள் அனைத்தையும் உமக்கும் நும் அருள் பெற்ற அன்பர்களுக்கும் ஆக்குவிராக! இஃது அடி யேனுடைய உள்ளக் கிடைக்கை'' யாகுமென்று வேண்டிநிற்க, அதுபொழுது இறைவனுடைய இன் னருளே ஒரு வடிவெடுத்து எதிர் வந்தது போல, அர்ச்சகர் ஒருவர் வந்தார்.

''ஆதி சைவனாம் அர்ச்சகன் ஒருவன்
நேரணைந்து
பூதி யீந்தனன்; நமக்கிது போலிலை நிமித்தம்
ஈது நன்னெறிக்கு ஏதுவென்(று) இருகை
யேற்(று) அணிந்து
வேத நாதனை யிறைஞ்சினார் விடைகொடு
மீண்டார்''

(திருவிளையாடற் புராணம்)

ஆதி சைவராகிய அருச்சகர் ஒருவர் குறை யிரந்து நிற்கும் திருவாதவூரரின் முன்பணைந்து விபூதியை வழங்கியபொழுது வாதவூரர் அகமிக மகிழ்ந்து, தமக்கு, இதனினும் நன்னிமித்தம் (சுபசகுனம்) வேறொன்றுமில்லை யென்றும், ஆண்டவனுடைய அருள்நெறியை அடைவதற்கு இதுவும் ஒரு காரணமாகுமென்றும் நமது இதயத் தில் எண்ணியெண்ணி இன்புற்று, இரண்டு கரங் களாலும் அவ்வெண் ணீற்றை ஏற்றுத் தம்முடல் முழுதும் அணிந்து கொண்டு வேதநாயகனாகிய விமலனை வணங்கி விடைபெற்று மீண்டு சென் றார்.

இத்தகைய வரலாற்றுண்மைகளால் விபூதி யானது நல்ல நிமித்தத்திற்கும், இறைவன் திரு வருளை இனிது பெறுதற்கும் ஏற்றதொரு இன்ப சாதனமாகும் என்பதையும், திருவாதவூரடி களாரின் திருவருள்வாக்கால் மிகத்தெளிவுடன் அறிந்து அளவிலா மகிழ்ச்சியை ஒருங்கே அடை கிறோம்.

கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள்!
கனவி லேனும் நீர் காணுதல் ஒழிக
அருள்செய் நீறிடார் அமுதுனக்கு இடினும்
அம்மலத்தினை அருந்துதல் ஒழிக!

—இராமலிங்க சுவாமிகள்.

—கம்பன்கவிநயமணி **வே. தியாகராஜன்**

8. கன்றுக்கு இரங்கும் பசுவினைப் போன்ற கருணையாளன்

எட்டாவது பாடல் கோபிகைகள் ஒரு பெண்ணை எழுப்ப அவள் வார்த்தைக்கு வார்த்தை பதில் கூறுவது மாதிரி அமைக்கப்பெற்றுள்ளது. கீழ்வானம் வெளுத்துவிட்டது என்னும்போது ''உங்கள் முகமெல்லாம் சந்திரன் மாதிரி உள்ளன, அத்தகைய ஒளி கண்டு பொழுது விடிந்து விட்டது என்கிறீர்கள் போலும்'' என்கின்றாள்.

பனிபெய்த புல்லைக் காலையில் எருமைகள் மேய்ந்தால் நிறைய பாலளிக்கும் என்று ஒரு வழக்கமுண்டு. அதனைச் சிறுவீடு மேய்தல் என்பர். கோபிகைகள் ''எருமைகள் சிறுவீடு மேய்கின்றன. எழுந்துபார்'' என்கின்றார்கள். ''உங்கள் முகவொளி கண்டு ஓடும் இருட்குழாத்தை எருமை என்று ஏமாந்து விட்டீர்களோ?'' எனக் கேட்கிறாள்.

''இபபடியெல்லாம் வீண்பேச்சு பேசாதே. கண்ணனின் திருமாளிகைக்குச் செல்லும் மற்ற பெண்களையும் வழியில் நிறுத்திவிட்டு உன்னை அழைக்க வந்தோம்''

நம்மைவிட்டுக் கண்ணனிருப்பிடம் போய் விட்டார்கள் எனப்பிரமித்துப் பதுமை போலாகிவிட்டாயோ-பாவாய் என அழைக்கின்றனர். கண்ணனின் ஆசைக்குப் பாத்திரமானவளே - கோதுகலமுடைய பாவாய் என்கின்றார்கள். பறைகொள்ள வேண்டுமென்ற காரணமாக அவனைப்பாடிப் பறைகொள்வோம் என்கிறார்கள்.

கேசி என்ற அசுரன் குதிரை வடிவங்கொண்டு கண்ணனை அழிக்க வந்தபோது கண்ணன் அக்குதிரையின் வாய்க்குள் தன் கையைவிட்டுக் குதிரையைப் பிளந்து எறிந்தான் (மாவாய் பிளந்தான்)

கம்சனால் அனுப்பப்பட்ட சாணூரன் முஷ்டிகன் என்ற இருமல்லர்களைக் கொன்றவன். அப்படிப்பட்ட தேவதேவனான கண்ணனை நாம் சென்று சேவிப்போம். ''மாவாய் பிளந்தவனை, மல்லலரை மாட்டிய தேவாதி தேவனை''எனக் கண்ணனின் வீரச் செயல்களைக் கூறினார்.

இறைவன் நமக்கு அருள்புரிய நம்மை நோக்கி நம்மிடம் வரும் அருளாளனே. எனினும் தன்னைநோக்கி வருபவரிடம் கன்றை நோக்கித் தாய் இரங்குவதுபோன்ற கருணையாளன். விபீஷணனை நோக்கி (எம்முறை அன்பின் வந்த அகமனார் காதல் ஐய) ''என்னை நோக்கி என்மீது அன்பு கொண்டு வந்தவனே'' என்றார்.

குசேலர் தன்னைக் காணவந்தபோது கண்ணன் தாயின் வரவை நோக்கிய கன்று போலாகி விட்டான் என்பர் குசேல உபாக்கியான ஆசிரியர்.

நாம் அவனைத் தேடிச் சென்றோம் என்றால் ''இந்தப் பணியில் நம்மைத் தேடிவந்துள்ளார்களே'' என எண்ணி இரங்கியருள்வான். ஆதலின் உடனே புறப்படு'' என்கிறாள்.

இப்பாடல் நம்மாழ்வாரைக் குறிக்கின்றது என்பர். கண்ணன் மீதான பக்தியே நம்மாழ்வாராக வந்தது என்பதால் கோதுகலமுடையாய் என்றும், எல்லா ஆழ்வார்களும் நின்ற நிலையில் சேவை

சாதிக்க இவர் மாத்திரம் அமர்ந்த கோலத்திலிருப்பதால் எழுந்திராய் என்றும் பாடினாராம்.

தாய் போலிரங்கி அருளும் கண்ணனை வேண்டி அவனருள் பெற்று உய்வோமாக!

கீழ்வானம் வெள்ளென்று எருமைச் சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமற்காத்து உன்னை
கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய்! பாடிப்பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவா எனறு ஆராய்ந்து அருளேலோர்எம் பாவாய்

9. மாமி, அவளை எழுப்புங்கள்

தூயவனான கண்ணனின் வருகையை எதிர்நோக்கி தூய்மையான மணிகள் இழைக்கப்பட்ட மணிமாடத்தில் ஆயர்குலத்தின் அணிவிளக்கான கண்ணனை நன்கு காண நிறைய விளக்குகளை ஏற்றியுள்ளாள். பளிங்கு மாடமான படியால் உள்ளே நடப்பதெல்லாம் வெளியிலிருந்தே தெரிகிறது. எண்ணைப்புகை முதலானவை இல்லாமல் ஒரு நறுமணம் வீசுகின்றதாம். தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய தூபம் கமழ, சொகுசான மெத்தையிலே, மென்மை குளிர்ச்சியுள்ள அமளியிலே தூயவளான ஒரு பெண்மணி கண்வளருகிறாள். களங்கமற்ற மாளிகையிலே களங்கமில்லாது கண்வளரும் குழந்தை போன்ற அவளை மாமன் மகளே என உறவிட்டு அழைக்கின்றாள். இறைவனுக்குச் சொந்தமான நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் உறவு என்பது குறிப்பு. கண்ணன் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அவனைக் காணத் தயாராக விழித்துக் கொண்டிருக்காமல் தூங்கிக் கொண்டிருக்கின்றாளே அசடு. மாமன்மகளை அம்மான் மகள் எனவும் மாமன் மகனை அம்மான் சேய் எனவும் அழைப்பதுண்டு. நாளடைவில் அது அம்மங்காள், அம்மாஞ்சி என மருவிவிட்டது. அலட்சியமாகவும் சோப்பேறியாகவுமிருந்து காரியங்களைத் தாமதமாகச் செய்பவர்களை அசட்டு அம்மங்காள், அசட்டு அம்மாஞ்சி எனக் கேலியாகக் கூறுவது உண்டு. கண்ணனது வரவை எதிர்பாராது தன்னைமறந்து தூங்கும் பெண்ணை மாமன் மகளே எனக் கேலியாக அழைக்கிறாள். தூமணிமாடத்தில் சுவற்றுக்கும் வாசற்படிக்கும் கூட வித்தியாசம் தெரியவில்லையாதலால் அவள் எழுந்துவந்துதான் திறக்க வேண்டும். வெறுமனே இருந்தால் கதவைத்தள்ளிக் கொண்டு உள்ளே நுழையலாம். அவள் உள்ளே தாளிட்டுக்கொண்டுள்ளாள். எனவே மணிக்கதவம் தாள் திறவாய்? எனகின்றார்.

அப்போது அந்த அறையில் காணப்பெறும் அப்பெண்ணின் தாயைக் கண்டு அவளை எழுப்பும்படி ''மாமீர் அவளை எழுப்பீரோ?'' எனக் கேட்டு ''நாங்கள் இவ்வளவு கூப்பிட்டும் அவள் எழவில்லையே! அவள் பேசமுடியாத ஊமையோ? அல்லது செவிடோ? கண்ணனை அடைந்ததால் ஏற்பட்ட மயக்கமா? கர்வமா? சொகுசான மாடம் மெத்தை எல்லாம் கிடைத்தும் இடைப்பெண்களுடன் திரிகிறாள் என எவராவது மந்திரம் போட்ட மயக்கமா?

''ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ? ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ'' என்கின்றாள். பாற்கடலில் பள்ளிகொண்ட கருணாமூர்த்தி நம் போன்ற எளியவர்கட்காக கோகுலமான இடையர் சேரி வந்துவிட்டான், அவனை அலட்சியம் செய்தால் மாமாயனான அவன் பள்ளிகொள்ள வெகுதூரம் சென்று விடுவான். மெல்ல மெல்ல நகர்ந்து அம்மாதவன் சென்று தன் இருப்பிடமான வைகுந்தத்திற்கே சென்றுவிட்டான் என்றால் என்ன செய்வது. உடனே எழுந்து சென்று வணங்க வேண்டும். அவனது எளிமை கண்டு சாமான்யன் என அலட்சியம் செய்ய வேண்டாம் என்கிறார். எனவே எழுந்து அவனது பல நாமங்களைப் பாடிப் பரவுவோம என்பது கருத்து.

திருமழிசைப் பிரானைக் குறிக்கும் பாசுரம் இது என்பர். மாமான்மகளே என்பது மகானான-பெரிய மகானான பிருகுவின் வம்சத்தைச் சேர்ந்தவரே! என்பதாகவும் ஆழ்வாரின் திரு மேனியிலேயே இறைவன் தோன்றியதாக வரலாறு. இவரது திருமேனியான தூமணி மாடத்திலே பக்தி எனும அன்பான விளக்கின வெளிச்சத்திலே இறைவன் தோன்றினார் என்னலாம். 'பாலில் கிடந்ததவும் பண்டரங்கம் மேயதுவும் ஆலில் துயின்றதுவும்'' என்ற சயனித்திருக்கும் கோலத்தையே இவர் பாடினார். எனவே 'துயிலலணையில் கண்வளரும்'' என்றார். திருக்குடந்தையில் இவரது பாடலைக் கேட்டு எழமுயன்றபோது அந்தச் சயனத்திருக்கோல அழகையே காண விரும்பி அப்படியே சேவை சாதிக்க வேண்டும் (கிடந்தவாறெழுந்திருந்து பேசுவாழி கேசனே) என்றதால் இறைவன் தனது பாம்பணையிலே சாய்ந்து கொண்டே காட்சியளிப்பதை உத்தான சயனம் என்கின்றனர். மாமாயன் வைகுந்தன் மாதவன் என்பது திருமழிசையாழ்வார் அடிக்கடி இறைவனை அழைக்கும் சொற்கள்; எனவே திருமழிசை பிரானைக் குறித்த பாடல் இது.

தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ! உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்!

10. வாய் திறவாதவள் கதவையும் திறவாளா?

கோபியர் ஒவ்வொரு பெண்ணாக எழுப்பிக் கண்ணன் வீட்டிற்குப் பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தியை அழைக்கின்றார்கள். கண்ணன் வீட்டிற்கும் இவள் வீட்டிற்கும் நடுவில் கதவோ சுவரோ கிடையாதாம். வேண்டும் போதெல்லாம் கண்ணனைக்காணும்சுவர்க்கத்தின் இன்பம் பெற்ற பாக்கியவதியான இவளை 'நோற்றுச்சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்' என அழைக்கின்றனர். வாசலைத் திறக்காமல் படுத்திருக்கும் நீ வாயைத் திறந்துகூட ஒரு வார்த்தை பேசமாட்டாயா? கண்ணனைக் கண்டு களித்த இன்ப நிலையிலே வாய்திறந்து பேசவில்லையோ? இராவணன் அழிக்கப்பட்டான் என்ற செய்தி கேட்ட சீதா பிராட்டி 'உனக்கு என்ன கொடுக்கலாம் என யோசனையில் பிரமித்து நின்று விட்டேன்'(உன்னி நோக்கி உரைமறந்து ஒவினென்) என்ற மாதிரி அளவிலா மகிழ்ச்சியின் விளைவான மௌனமா? வேண்டுவார் வேண்டுவதெல்லாம் அளிக்கும் கண்ணன் இங்கு வந்து போயிருக்கிறான் போலும்! அவனது திருத்துழாயின் மணம் இங்கு வீசுகின்றது. மாமாயனான அவனுக்குக் கதவைத் திறவாமலே உள்ளேவரும் ஆற்றல் உண்டே! 'நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்-போற்றப்பறைதரும்

புண்ணியன்''. அத்தகைய திருமாலால் சென்ற இராமாவதாரத்தில் அழிக்கப்பெற்ற கும்பகருணன் தன் தூக்கத்தை உனக்கு அளித்துவிட்டானோ? கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்-தோற்று முனக்கே பெருந்துயில் தந்தானோ? அதனால்தான் நன்றாகத் தூங்குகிறாய்-ஆற்ற அனந்தல் உடையாய்! நீ எங்கள் கூட்டத்தில், துயில் நீங்கி எழுந்து வந்து சேர்ந்தால் அது எங்களுக்கு ஒரு அழகிய ஆபரணம் கிடைத்த மாதிரியன்றோ (அருங்கலமே) தூக்கம் தெளிந்து (தேற்றமாய்) கதவைத் திறப்பாயாக'' என்கிறார்.

இது பேயாழ்வாரைக் குறிக்கும் பாசுரம் என்பர். பொய்கையாழ்வார் 'வையந்தகளியாய்' என உலகத்தையே ஒரு விளக்காக உருவகம் செய்ய பூதத்தாழ்வார்' அன்பே தகளியாய்' எனத் தானே விளக்காய் நிற்க, இரண்டு ஞான விளக்குகளுக்கும் நடுவில் தெய்வ தம்பதிகளை ''திருக்கண்டேன்'' என அனுபவித்தது தவஞ்செய்து பெற்ற சுவர்க் கானுபவமன்றோ? இதையே 'நோற்றுச் சுவர்க்கம் எனக்குறித்தார். தண்துழாய் மார்பன் என இவர் துளசிபற்றித் தன் பாசுரங்களில் அடிக்கடி குறிப்ப தால் நாற்றத் துழாய்முடி நாராயணன் என்றார். எவருக்கும் கிடைக்காதபேறு இறைவனைக் கண்டு 'திருக்கண்டேன்' எனபபாடியதால் 'அருங்கலமே' எனக்குறித்தார். உமது திருநாமம் பேயாழ்வார். பேய்போன்று அவசரமில்லாது, நிதானமாய் வந்து (தேற்றமாய்வந்து) கதவைத் திறக்குமாறு கூறினார் என்பர்.

நமக்கும் இறைவனைக் காணும் பேறுகிட்ட வேண்டுவோமாக!

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ! வாசல் திறவாதார்!
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்
பண்டொருநாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில் தந்தானோ!
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாய்! 10

11. மயில் ஆடாமல் மயங்கிக் கிடக்கலாமா?

மந்தை மந்தையாகப் பசுக்களைச் சொந்தமாக உடைய ஒருவனது மகளை எழுப்புகிறார்கள். கண்ணனுக்கு ஆயர்கள், ஆய்ச்சிகள், ஆயர் சிறுமிகள், பசுக்கள் இவ்வளவு பேர்கள்மீது அன்பிருந்தாலும் கன்றுகளிடம் அதிகமான அனபு.

அரக்கன் ஒருவன் பாம்புருவம் கொண்டு பசுக்களையும் கன்றுகளையும் விழுங்க கண்ணன் பாம்பின் தலையைப் பிளந்து அரக்கனைக் கொன்று அவைகளை விடுவித்தான்.

ஒரு சமயம் பிரம்மதேவன் கன்றுகளையும் இடையர்குலச்சிறுவர்களையும் ஒளித்து வைத்தார். கண்ணன் பசுக்கள் ஏங்கக்கூடாது என்ற கருணையில் தானே கன்றுகளாகவும் இடையர்கள் வேதனைப்படக்கூடாது எனச் சிறுவர்களாகவும் மாறினார். பிரமனை தண்டிக்க வேண்டுமென எண்ணித்தானே பிரமன் வேடமிட்டுக் கொண்டு சத்யலோகத்தில் இருந்தார். நிஜபிரமன் சத்ய லோகம் திரும்பியபோது ''உள்ளே பிரமா இருக்கிறார். நீ வேஷதாரி வெளியில் போ'' என்று தடுக்கப்பட்டார். பிறகு பிரமன் கண்ணனை வணங்கித் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு கன்றுகளையும் இடையர்குலச் சிறுவர்களையும் விடுதலை செய்து கண்ணனிடம் மன்னிப்புப் பெற்றார் என ஒரு வரலாறு உண்டு.

கண்ணனது அன்பைப் பெற்ற பசுக்கள் கன்றுகளுடன் நன்கு செழித்து வாழ்ந்து நிறைய பால் அளித்தன. கிழப்பசுக்களும் நல்ல பலத்துடன் பாலளித்தன. இத்தகையபசுக்கூட்டங்களின் சொந்தக்காரனான ஒருவனின் மகளை எழுப்புகின்றனர். கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து வாழ்பவன். இடையர்களுக்குப் பால் கறப்பது ஒரு கடமை. எல்லாப்பாலையும் கன்றுகளுக்கு ஊட்டிவிட்டால் அவைகளுக்குக் கெடுதல், பாலைக் கறக்காமல் விட்டுவிட்டால் பசுக்களுக்கும் கெடுதல், தாயையும் கன்றையும் பிரித்து வைத்தால் பாவம். கண்ணனுக்கு விரோதிகள் தமக்கும் விரோதிகள் என எண்ணும் இடையர் குலத்தவர் பால் கறந்து தம் கடமை முடிந்ததும் எதிரிகளிடம் சென்று அவர்களுடைய (திறல்) பலத்தை அழிப்பார்கள். அவர்களை அழிக்கமாட்டார்கள். அவர்களது தவறான பலத்தை மட்டும் அழிப்பார்கள். யுத்த தருமம் அறிந்தவர்கள்; ஆயுதமில்லாத வருடனோ, புறமுதுகுகாட்டுபவருடனோ சண்டையிடாதவர்கள். அப்பேர்பட்டவர்களின் மகளே! ''செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்-குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே''! என விளிக்கின்றனர். இவள் கோவலர்தம் பொற்கொடி. கண்ணன் ஆயர்குலத்தின் அணிவிளக்கு. கருமலையான கண்ணன் எனும் கணவனைத் தழுவாமல் கொடிபோன்ற நீ தரையில் கிடக்கலாமா? கண்ணன் ஆண்மகனே கண்டு ஆசை கொள்ளும் அழகுடையவன். இவனோ பெண்களே பார்த்து ஆசைப்படக்கூடிய பேரழகி. எனவே இவளை ''புற்றரவல்குல்புனமயிலே''. என அழைக்கின்றனர். மேகத்தைக் கண்டு மயில் ஆடுவதுபோல மேகவண்ணனான கண்ணனின் பெயர் கேட்டு மகிழ்ந்து ஆடவேண்டிய நீ உறங்கலாமா? எல்லாத் தோழிகளும் வந்துள்ளனர். இறைவன் நாமத்தைப் பாடுகின்றனர். நீ சிறிதும் அசைவற்று (சிற்றாதே) பேசாது கிடக்கலாமா? எங்களுக்கு உயிராக நட்புடைய நீ கண்ணனுக்கு உகந்த மனைவியன்றோ?செல்வப் பெண்டாட்டி நீ. உடலுக்குத் தான் ஓய்வு வேண்டும். இறைவனின் குணத்தைப் பாடியாடுவதே உனக்கு இன்பமளிக்கும் ஓய்வன்றோ? நீ எதற்கு உறங்க வேண்டும்' 'எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்!''

இப்பாடல் பூதத்தாழ்வாரைக் குறிக்கும் என்பர். தாய்வயிற்றில் பிறவாதவர் என்றதால் குற்றமொன்றில்லாதவர். இவரது மனம் இறைவனை நோக்கி ஓடும் கொடிபோன்றது. கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே-மால்தேடியோடும் மனம் என்பதை இவர் வாக்கே கூறியுள்ளது. இவர் பிறந்தது கடல்மல்லையில். அங்கு நீரைப்பருக மேகம் வரும்; மேகத்தைக் கண்டு மயிலாடும். எனவே இவரை புனமயிலே எனக் குறித்தனர். பேயாரும் பொய்கையாரும் இவருக்குச் சுற்றத்தார். ஏனைய ஆழ்வார் தோழிமார் எனக் குறித்தார்.

உலக மயக்கம் தீர்ந்த ஆழ்வார்களை உறவினராகக்கொண்டு வாழக் கண்ணனை வேண்டுவோமாக!

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே
புற்றரவல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமாரெல்லாம் வந்துநின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி
எற்றுக்குறங்கும் பொருளேலோர் எம்பாவாய்

(தொடரும்)

முக்தி வழங்குமலை அண்ணாமலை

பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு பலத்த போட்டி, பிரம்மாவுக்கும் மகா விட்டுணுவுக்கும்தான். ஆம் தந்தையும் மகனுமே தம்மில யார் பெரியவர் என்று வாதமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாதத்தைத் தீர்த்து வைக்க சிவபிரான் வருகிறார். எவ்வளவோ சொல் லிப் பார்க்கிறார். இருவ்ரும் கேட்கிறபடியாக இல்லை. கடைசியாக அவரே ஒரு போட்டியை ஏற்பாடு பண்ணி அந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பெரியவர் என்று தீர்மானிக்கலாம் என்கிறார். இருவரும் இசைகிறார்கள். அவ்வளவுதான். அவர் வானுற ஓங்கி வளரும் ஒரு அழல் பிழம்பாக மாறுகிறார். அந்த அற்புத உருவின் அடியையோ முடியையோ யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்று போட்டி அமைகிறது. மகா விட்டுணு வராக உருவில் அடிதேடப் புறப்படு கிறார். அதல பாதாளங்களையே ஊடுருவிச் செல் கிறார். அன்ன உருவில் பிரம்மா வானுலகில் பறந்து பறந்து செல்கிறார் முடிகாண. சென்று கொண்டே இருக்கிறார்கள் இருவரும். அடி யையோ முடியையோ கண்ட பாடாக இல்லை இருவருக்கும். இருவரில் விட்டுணு கொஞ்சம் யோக்கியமானவர். ஆதலால் அடியைக்காண இயலவில்லை என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பிவிடுகிறார் பூலோகத்திற்கு. பிரம்மா அப்படித் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ஏதாவது குயுக்திபண்ணி இறை வன் முடியைக் கண்டு விட்டதாகச் சொல்ல விரும்பு கிறார். அந்தச் சமயத்தில் ஒரு தாழம்பூ தலை கீழாக வருகிறது. எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டால், இறைவன் முடியிலிருந்து வருகிறேன், அதிலிருந்து நழுவி கற்பகோடி காலங்கள் ஆகி விட்டது என்று சொல்கிறது தாழம்பூ. அதைச் சரி கட்டுகிறார் பிரம்மா, தன்னை இறைவன் முடியிலிருந்து பிரம்மா எடுத்து வந்ததாகப் பொய் சாட்சியம் சொல்லச் செய்கிறார். இவர்கள் சொல் வது பொய் என்று அறிய எவ்வளவு நேரம் செல் லும் இறைவனுக்கு. பிரம்மாவைப் பூலோகத்தில் சாதாரண மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார். தாழம்பூ தன்னுடைய பூசைக்கே உரியதல்ல என்று இறைவனால் விலக்கப்படுகிறது. விட்டுணு தன் தோல்வியை ஒப்புக்கொண்டதாக மெச்சி அவருக் குத் தன் அடியையயும் முடியையுமே காட்டு கிறார். அதற்காக அழல் உருவில் இருந்த இறை வன் மலை உருவில் குறுகுகிறார். அப்படிப் பொங் கழல் உருவனாக இருந்த இறைவனே அண்ணா மலையானாக மாறி நிற்கிறார்.

இக் கதைக்குப் பின்னால் இருக்கும் தத்துவ உண்மையைக் காணலாம். தன்னைப் படைத்துக் காத்து அழிக்கும் தலைவனாக உள்ள இறை வனைக் காண மனிதன் எவ்வளவோ காலம் முயன் றிருக்கிறான். மக்களுள் இரண்டு பிரிவ்னர். ஒருவர் செல்வத்தால் சிறந்த சீமான்கள்; மற்றவர் அறி வால் உயர்ந்த அறிஞர்கள். செல்வத்தால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்று செருக் குடையவர் செல்வந்தர். அறிவால் அறிய முடியாத விஷயம் ஒன்றும் இருக்கவே இருக்காது என்ற கர்வம் உடையவர் அறிஞர். உண்மை என்ன என் றால் இவர்கள் இருவராலேயுமே இறைவனைக் காண்பது இயலாதுதான். செருக்கும் கர்வமும் நிறைந்த உள்ளத்தால், இறைவன் முடியை என்ன அடியையுமே காண முடியாது என்ற உண்மையைத் தான் விளக்குகிறது அண்ணாமலையார் கதை.

செல்வராலும் அறிஞராலும் அறியொணாத இறைவன பின்னர் யாருக்கு எளியவனாகத் தன் உருவைக் காட்டுகிறான் என்றால், காதலாகிக் கசிந்து கண்ணிர் மல்கும் பக்தர்களுக்குத்தான். பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய மணிவாசகர், அண்ணாமலையில் அந்த பொங்கழல் உருவமான அண்ணாமலையானைக் கண்டபோது 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி' என்ற தன் திருவெம்பாவைப் பாடலை ஆரம்பிக் கிறார். பத்தொன்பது பாட்டுப் பாடி முடிந்ததும் ஆதியாகிய முடி எங்கேயிருக்கிறது. அந்தமாகிய அடி எங்கே இருக்கிறது என்று கண்டுவிடு கிறார். ஆம். ஆதியாம் பாதமலர், அந்த மாம் செந்தளிர்கள் என்றுதானே, திருவெம்பாவை இருபதாம் பாட்டு கூறுகிறது. ஆம், இறைவனது அடியும் முடியும் அவனது திருத்தாள்களே என்ற உண்மையைப் பக்தனான கவிஞன் எவ்வளவு எளி தாகக் கண்டு விடுகிறான். மகாவிட்டுணுவையும் பிரம்மாவையுமே மண்ணைக்கௌவ வைத்து விடு கிறானே அவன். 'விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளக்கொளியாய் எண்ணிறந்த எல்லை இலாதானாக 'இருக்கும் இறைவனை எவ்வளவு எளிதாகச் சுட்டிக்காட்ட முடிகிறது கவிஞனுக்கு இத்தனை அரிய உண்மைகளை விளக்கிக்கொண்டு நிற்கின்ற மலைதான் திரு அண்ணாமலை. அந்த மலையின் அடிவாரத்திலே கோயில் கொண்டிருக் கிறவர்தான் அண்ணாமலையார்.

அண்ணாமலையை நினைக்கின்ற போதெல் லாம், இல்லை அண்ணாமலையானைக் கண்டு தொழுகின்ற போதெல்லாம் இறைவழிபாடு உல கத்தில் எப்படித்தோன்றிற்று என்ற உண்மை யுமே விளக்கமுறும். மனிதனுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அவன் வாழ்வதற்கு ஒளியும் என்று அறி

கிறோம். சூரியன் இல்லாத பகலும், சந்திரன் இல்லாத இரவும், நட்சத்திரங்கள் இல்லாதவானும் இருந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்ப்போம். இறைவனது படைப்புகளில் எல்லாம் சிறந்த படைப்பு ஞாயிறுதானே. சூரியனிடமிருந்து எழுகின்ற ஒளியும் வெம்மையும் இல்லா விட்டால் உலகமும் உயிர்களும் உய்வதேது? ஆதலால் சிந்திக்கத் தெரிந்த மனிதன் ஞாயிறையே, ஞாயிறு மூலமாக அதனை உலகுக்குத் தந்த இறைவனையே வந்தித்து வணங்க முற்பட்டிருக்கிறான். இப்படித் தான் எல்லாச் சமயத்தாரிடத்தும் இறை வழிபாடு ஒளிவழிபாடாகவே உரு எடுத்திருக்கிறது. இருள் போக்கும் தன்மையோடு, மருள் நீக்கும் தூய்மையும், ஆக்கிக் காத்து அழிக்கும் தன்மையும், அருவாய், உருவாய், அருவுருவாய் இயங்கும் இயல்பும் பஞ்ச பூதங்களில் ஒன்றான தீயினிடத்தேதான் மிகுந்திருக்கின்றன. இப்படி அச்கினியின இயல்பும் இறைவன் இயல்பும் இணைந்திருப்பதன் காரணமாக ஒளி வழிபாடே தீ வழிபாடாக பரிணமித்திருக்கிறது.

இறைவனை ஞானச் சுடர் விளக்காய் நின்றவன் என்று அப்பர் பாடினால், ஆதி அந்தம் ஆயினாய் சோதியுள் ஓர் சோதியானாய் என்று சம்பந்தர் வழிபடுகிறார். சோதியே, சுடரே, சூழ்ஒளி விளக்கே என்று மாணிக்கவாசகரும், தூண்டா விளக்கின் நற்சோதி என்று சுந்தரரும் இறைவனை அழைக்கின்றனர். கற்பனை கடந்த சோதி, கருணையே உருவமாக நிற்கின்றான் என்று சேக்கிழார் பாடிப் பரவி மகிழ்கிறார். பயிலுப் சுடர் ஒளி மூர்த்தி பங்கயக்கண்ணன் என்று நம்மாழ்வார் பாற்கடல் பரமனைக் குறித்தால், திருத்தக்கதேவர் சுடரிற்சுடரும் திருமூர்த்தி என்றே பாடுவார். இப்படியே அடியார்களும் கவிஞர்களும் இறைவனைப் பொங்கழல் உருவனாகவே காண்கிறார்கள். இந்த அனல் வழிபாடே பின்னர் திருவிளக்கு வழிபாடாக மக்களிடை இன்றும் நிலைத்திருக்கிறது. இச்சிறிய திருவிளக்கு வழிபாடே, பெரிய கார்த்திகைத் திருநாளாக அண்ணாமலையில் கொண்டாடப்படுகிறது.

அண்ணாமலை கார்த்திகை தீப தரிசனம் ஒரு அற்புதமான அனுபவம். கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று லட்சக்கணக்கான மக்கள், ஆண் பெண் பிள்ளைகள் எல்லாம் அண்ணாமலையார் கோயில் பிரகாரத்திலும், நகரின் தெருக்களிலும், வீடுகளின் மாடிகளிலும் குழுமியிருக்கின்றனர். சரியாய் மாலை ஆறுமணிக்கு, முழுமதி வானில் எழுந்து கோபுர உச்சியைத் தடவி நிற்கிறது. அந்தச் சமயத்தில் கோயிலிலுள்ள பஞ்ச மூர்த்திகளும் மண்டபத்தில் வந்து நிற்கிறார்கள். அதிர்வெடியொன்று கிளம்புகிறது வானை நோக்கி. ஐந்து கற்பூர ஆரத்தி தட்டுகளை உயர்த்துகிறார்கள் அர்ச்சகர்கள். அதே சமயத்தில் அண்ணாமலையின் உச்சியில் உள்ள கற்பூரக் கொப்பறையிலிருந்து சுடர் எழுந்து வான் நோக்கி நிமிர்கிறது. ''அரோகரா, அண்ணாமலைக்கு அரோகரா'' என்ற கோஷம் மக்களிடையே எழுகிறது உச்ச ஸ்தாயியிலே. பார்ப்பவர் உடல் புல்லரிக்கிறது உள்ளம் விம்மிப் பெருமிதம் அடைகிறது பொங்கழல் உருவனைக் காணுவதால். இத்தனை அனுபவத்திற்கும் நிலைக்களனாய் இருப்பதுதான், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அண்ணாமலையார் கோயில். இக்கோயில் சுமார் இருபத்து நான்கு ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் அமைந்திருக்கிறது. கோயிலைச் சுற்றி உயரமான மதில், மதிலின் நான்கு புறத்தும் நான்கு பெரிய கோபுரங்கள். கிழக்கே பிரதான வாயிலில் உள்ள ராஜகோபுரம் பதினோரு நிலைகளும் இருநூற்றுப் பதினேழு அடி உயரமும் உடையது. பரத சாத்திரத்தில் உள்ள தாண்டவ லட்சணம் என்னும் நாட்டிய நிலைகள் நூற்று எட்டையும் விளக்கும் சிற்ப வடிவங்கள் இருபக்கத்துச் சுவர்களிலும் நிறைந்து இருக்கும். இந்த வாயிலைக் கடந்தால் முதலில் நாம் சென்று சேர்வது கம்பத்து இளையனார் கோயில். அருணகிரியார் பிரார்த்தனைக்கு இரங்கி, பிரபுட தேவ ராயருக்கு முருகப் பெருமான் கம்பத்தில் காட்சி அருளிய இடத்தில் இந்தத் திருக்கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு வில்லேந்திய வேலன் மயில் மீது காலையூன்றி கம்பீரமாக எழுந்து நிற்கும் சிலை கலையுள்ளம் படைத்தவர் கண்களுக்கு ஒரு பெரு விருந்தாகும்.

இனி சர்வ சித்தி விநாயகர், பாதாள லிங்கேசுவரர், கோபுரத்து இளையனார் முதலியவர்களைத் தரிசிக்க பின் நாம் கடக்க வேண்டியது வல்லாள மகாராஜன் கோபுரம். உடல் நோயால் நலிந்த அருணகிரியார் தன் உயிரை மாய்த்துக் கொள்ள இக்கோபுரத்தின் மீதேறி அங்கிருந்து குதித்தார் என்றும், அப்போது முருகப் பெருமானே அவரைத் தன் கையில் ஏந்தித் தரைதனில் விட்டார் என்றும், அதுமுதல் உடலில் மட்டும் அல்லாமல் உள்ளத்திலேயும் நலிவடையாதவராய் திருப்புகழ் பாடத் துவங்கினார் என்றும் அறிகிறோம். அருணகிரியாரைத் தாங்கியதுபோல் நம்மையும் தாங்குவான் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தால் நாமும் கோபுரத்தில் ஏறிக் குதிக்க முனையலாம். இதன்பின் கிளிக் கோபுரத்தையும் பஞ்சமூர்த்தி மண்டபங்களையும் கடந்து சென்றால் அண்ணாமலையாரைக் கண்டு தொழலாம். நல்ல லிங்கத் திருவுருவில் அமைந்தவர் அண்ணாமலையார். பொன் போர்த்த நாகாபரணமும் நிறையமலர்மாலைகளும் அணிந்தவராகக் காட்சி தருவார். இந்த அண்ணா மலையாரையே 'லிங்கோத்பவர்' என்று கலையுலகம் உருவாக்கியிருக்கிறது. ராஜராஜனும் அவனுக்குப் பின்வந்த சோழர்களும் கட்டிய கோயில்களில் எல்லாம் கோஷ்ட விக்கிரமாக இவர் நின்று கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

அண்ணாமலையாரை வலம் வந்து பின்னர் அவருக்கு இடப்பக்கத்திலே கோயில் கொண்டிருக்கிற உண்ணாமுலையம்மையைத் தரிசிக்கப் போகலாம். மகாமண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் நவசக்தி மண்டபம். அங்கு உருவாகியிருக்கும், காலசம்ஹாரரும், வீணாதாரரும், இருபதாம் நூற்றாண்டு சிற்பிகளின் கைத்திறன். ஆதலால் அவைகளில் மிக்க கலை அழகை எல்லாம் எதிர் பார்த்தல்இயலாது. கர்ப்பக் கிரகத்தில் இருக்கும் அண்ணாமலையாரின் தர்மபத்தினி உண்ணாமுலையம்மை, கம்பீரமான திருவுரு அல்லாவிட்டாலும் அழகும் எழிலும் நிறைந்த உருவம். இந்த அண்ணாமலையார் கோயில் பெரும் பகுதி வல்லாள மகாராஜனால் கட்டப்பட்டது என்று கர்ண பரம்பரை கூறும். இந்த வல்லாளன் சரித்திரப் பிரசித்தி பெற்றவனல்லை. என்றாலும் இவனைப் பற்றி, இவனது பக்தியைப் பற்றி ஒரு கதை.

ஒருநாள் அண்ணாமலை அண்ணல் அடியவர் வடிவந்தாங்கி வல்லாள ராஜனிடம் வருகிறார். வந்தவர், 'அன்றிரவு தன்னுடன் தங்க ஒரு பெண் வேண்டும்' என்கிறார். இல்லை என்று சொல்ல அறியாத வல்லாளன் தேவதாசிகளில் ஒருத்தியை அனுப்பவிரைகிறார். அவர்கள் ஒவ்வொருவரும் அன்று பிறர் வயப்பட்டு இருப்பதாகத் தகவல் வருகிறது. மன்னன் இதை அறிந்து மயங்கிய போது, மன்னனின் இளையராணி சல்லமாதேவியே

அடியவர்க்குத் தன்னுடலைத் தத்தம் பண்ண முனைகிறாள். ஆனால் பஞ்சணையில் தூங்கிய சங்கமரைத் துயில் எழுப்ப அவர் பாதத்தைச் சல்லமை தீண்டலும் அவர் பச்சைப் பசுங்குழவியாகி விடுகிறார். அரசன் அரசியரது பிள்ளைக்கலி தீர்க்க வந்த இந்த பிள்ளைப் பெருமாள் பின்னர் இடபாரூடராய்க் காட்சி தந்து மறைகிறார். இப்படி வல்லாளன் மகனாக அவதரித்த அண்ணாமலையார் இன்று மாசி மகத்தன்று பள்ளிகொண்டாப்பட்டுக்கு எழுந்தருளி, வல்லாளனுக்கு வருஷாப்தீகச் சடங்கையெல்லாம் செய்கிறார். இறைவனின் பிள்ளையாக மக்கள் இருப்பதை அறிவோம். இறைவனே பக்தனது பிள்ளையாக மாறி அவனுக்கு ஈமக்கடன் செய்யும் முறையை இங்கே தான் அறிகிறோம்.

இக்கோயிலில் நூற்று ஆறு கல்வெட்டுகள் இருக்கின்றன. உத்தமச் சோழன் பரகேசரிவர்மன், ராஜேந்திர சோழதேவன், திரிபுவன சக்ரவர்த்தி ராஜராஜதேவன் முதலிய சோழ மன்னர்களும், மாறவர்மன், குலசேகரன முதலிய பாண்டிய மன்னர்களும் ஏற்படுத்திய நிபந்தங்களைக் குறிக்க எழுந்தவையே. இதில் பெரும் பகுதியான கல்வெட்டுகள் கீழ் வாசலில் உள்ள ராஜகோபுரத்தை விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயன் கட்டி முடித்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவனே ஆயிரக்கால் மண்டபம் சிவகங்கைக்குளம் முதலியவற்றை உருவாக்கியவன் என்றும் அறிகிறோம். விஜயநகர நாயக்க மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்ட ராஜ நாராயண சம்புவராயன் ஒரு கோபுரம் கட்டினான் என்றும் அந்தக் கோபுரத்தில் இருந்தே 'ஜீரணோத்தார தாஜகம்' என்ற கோயில் திருப்பணி விளக்க நூலை வாமதேவன் எழுதினான் என்றும் ஒரு கல்வெட்டு கூறுகின்றது. கோயில் நிரம்பப் புராதனமான கோயில் என்பதும், இக்கோயிலைச் சோழர், பாண்டியர், நாயக்கர், நகரத்தார் எல்லாம் கட்டியும் புதுப்பித்தும், நிபந்தங்கள் ஏற்படுத்தியும், பாதுகாத்திருக்கிறார்கள என்றும் அறிகிறோம.

கோயிலை விட்டு வெளியே வருமுன் உங்களை ஒரு அற்புதமான மூர்த்தியின் முன் கொண்டு சென்று நிறுத்த விழைகிறேன். ராஜராஜசோழனுக்கு முந்திய சோழ மன்னர்கள் கோயில்களில் எல்லாம் கர்ப்பக் கிரகத்திற்கு வெளியே மேற்கே பார்த்த கோஷ்டத்தில் அர்த்தநாரியின அழகிய சிலாவுருவம் இருக்கப் பார்ப்போம். ஆனால் அற்புதமாக செப்புச் சிலை வடிவத்தில் நடராஜரையும், திரிபுராந்தகரையும், பிட்சாடனரையும் வடித்தெடுத்த சோழநாட்டுச் சிற்பிகள் அர்த்தநாரியை மட்டும் செப்புச் சிலை வடிவில் அமைக்க மறந்து விட்டிருக்கிறார்கள். இதன் காரணம் யாதோ? திருச்செங்கோட்டு மலையில் உள்ளகோயில் அர்த்தநாரி என்னும் மாதிருக்கும் பாதியன், கல்லிலும் செம்பிலுமே உருவாகியிருக்கிறான் என்றால் அது சோழர்களுக்கு மிகவும் பிந்திய காலத்தில்தான். ஆனால் அந்த மாதிருக்கும் பாதியனை, பஞ்சின் மெல்லடியாள் பாகனை அற்புதமான செப்புச்சிலை வடிவில் பார்ப்பது இத்தலத்தில்தான். நல்ல சோழர் காலத்துச் செப்புச் சிலை. நிரம்ப அழகு வாய்ந்த திரு வுருவம். அந்தத் திரு உருவின் முன் நின்று

உண்ணாமுலை உமையாளொடும்

உடனாகிய ஒருவன்,

பெண்ணாகிய பெருமான் மலை

திருமாமணி திகழ,

மண் ஆர்ந்தன அருவித்திரள்

மழலை முழவு அதிரும்

அண்ணாமலை தொழுவார் வினை

வழுவா வணம் அறுமே

என்று நாமும் ஞானசம்பந்தரோடு சேர்ந்து பாடினால் நமது வினைகளும் அகலும். ஆதலால் தயாராயிருங்கள் தீபத்திருநாளன்று அண்ணாமலை சென்று தொழ.

பல சுவையான செய்திகளைப் படித்துக் களிப்புற்றேன். இப்போது வெளிவரும் பல இதழ்களில் ''திருக்கோயில்'' இதழ் முன்னோடியாகத் திகழ்கிறது.

—எம் சந்திரசேகர், ஆவடி, சென்னை-54.

உமியென உலகில் உலவும்

உதவாத பல தமிழ்க்குப்பை நூல் நீக்கி
அன்புத்திரு அமிர்தலிங்கனார் வரையும்
திருக்கோயில் அமிர்தம் இறை அருளோடு
நம்மைச் சேர்க்கும்

—அ. அருணாசலம்,
டாக்டர் எஸ். எஸ். பிள்ளைத்தெரு,
செங்கோட்டை.

இன்று திருமிகு திருக்கோயில் கண்டு மகிழ்ந்தேன்
பக்கத்திற்குப் பக்கம் பாலும் தேனும் பழமும்
சுவைக்கின்றன.
திருமுருக நாவேந்தர் கிருபானந்தவாரியார்
கட்டுரை முருகனே பேசுவது போல் சுவைக்கிறது.

—கவியோகி மகரிஷி டாக்டர் சுத்தானந்த
பாரதியார், சோழபுரம்.

கம்பரின் இராமாவதாரம்

டாக்டர் த. அமிர்தலிங்கம்

-[3]-

விசுவாமித்திரர் கொள்ளும் கோபம், மலை குலைந்தாலும் மனம் குலையாத தசரத மாமன்னனையே நடுங்க வைத்துவிடுகிறது. விசுவாமித்திரரின் கோபம் என்ன சாபத்தைத் தமக்குப் பெற்றுத் தருமோ என்றும் அவர் நடுங்க, அவருடைய குலதருவான வசிட்டர் விசுவாமித்திரரைச் சாந்தப்படுத்தும் வகையில் தசரதரை அணுகி ''மன்னா! என்ன இது? விசுவாமித்திரருக்குக் கோபம் வருமாறு நீ நடந்து கொள்ளலாமா? சத்தியத்தின் வடிவமான நீயே தந்த வாக்கு தவறலாமா? முக்காலமும் உணர்ந்த மகாதவசி விசுவாமித்திரர். அளவிலா ஆற்றல்கள் பெற்றவர். அவருடைய வேள்வியை ஊறின்றி முடித்துக்கொள்ள அவரே அறிவார். அப்படி இருந்தும் அவர் இராமனைத் துணைக்கு வேண்டுகிறார் என்றால் அது இராமனும் நீயும் செய்த தவமே ஆகும். உன்னுடைய குமாரனுக்குச் சேரக்கூடிய நன்மைகளை நீயே வேண்டாம் என்று தடுக்கலாமா? பருவமழை பொழிந்து ஆறு, ஏரி குளங்கள் எல்லாம் நீரினால் நிறைந்து நாடே நலம் பெறுவதை யாராவது வேண்டாம் என்று மறுப்பார்களா? அதே போல் உன் மகன் இராமனுக்கு அளவிலாத ஆற்றல்கள் வந்து சேர ஒரு பொன்னானவாய்ப்பு இன்று கிடைத்திருக்கிறது. அதை வேண்டாம் என்று மறுக்காமல் இராமனை உடனே அழைத்து ஆசி கூறி விசுவாமித்திரருடன் அனுப்பிவை'' என்று வசிட்டர் கட்டளையிடுகிறார் தசரதருக்கு.

''பெய்யு மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய்கொள் வேலைவாய் முடுகும்ஆறுபோல்
ஐய நின்மகற்கு அளவில் விஞ்சை வந்து
எய்துகாலம் இன்றுஎதிர்ந்த தென்னவே''

இவ்வாறு வசிட்டர் கட்டளையிட, குலகுருவின் வாசகத்தைத்தலை மேல் கொண்டவராய் தசரதரும் ''திருமகள் துணைவனாம் இராமனை அழைத்து வாருங்கள்'' என்று உத்திரவிடுகிறார். அப்பொழுதுதான் விசுவாமித்திரரும் தம் கோபத்தை அடக்கிச் சாந்தத்தை முகத்தில் வரவழைத்துக் கொண்டு ஆசனத்தில் அமர்கிறார். தந்தை அழைக்கிறார் என்று கேட்டவுடன் இராமரும் அவருடன் எப்பொழுதும் இணைபிரியாத இலக்குவனனும் விரைந்து வந்து சேருகிறார்கள்.

விசுவாமித்திரர் இராமனை மட்டுமே வேண்டினார். ஆனால் தசரதரோ மனம் மகிழ இராமருடன் இலக்குவனனையும் விசுவாமித்திரருக்கு வழங்குகிறார். நமக்குப் பிரியமான பொருளை ஒருவர் இரவல் கேட்கும் போது அதனைப் பிரிய மனம் இல்லாத காரணத்தாலோ, புதியவரை நம்ப இயலாத காரணத்தாலோ முதலில் மறுக்கப் பார்க்கிறோம். ஆனால் நம்பிக்கை வந்து விட்டாலோ நம் நம்பிக்கையின் ஆழத்தைப் புலப்படுத்துவதற்காக ஒரு பொருளை வேண்டியவருக்கும் இரண்டு பொருள்களை வழங்க நாம் தயங்குவது இல்லை.

இதைப்போலவே தசரத மாமன்னரும் வசிட்டரால் மனம் தேறி, விசுவாமித்திரருக்கு இராமனை வழங்குவதுடன், விசுவாமித்திரரை நம்பிடும் தம் நம்பிக்கையின் ஆழத்தை உணர்த்தும் வகையிலும் அவரைச் சாந்தப்படுத்தும் வகையிலும் இராம இலக்குவனர் இருவரையுமே அவரிடம் ஒப்படைக்கிறார். ''நீங்களே தந்தையாகவும் தாயாகவும் இருந்து என் மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்திடுங்கள்'' என்று கூறித் தசரதர் இராமலக்குவனரை விசுவாமித்திரரிடம் ஒப்படைக்க ''மங்களமுண்டாகட்டும்'' என்று தசரதரை விசுவாமித்திரரும் வாழ்த்துகிறார். ''இனி என் வேள்வியும் தடையின்றி முடிந்து விடும்'' என்று கூறியவராய் விசுவாமித்திரர் இராமலக்குவனரை அழைத்துக் கொண்டு தசரதரிடமும், வசிட்டரிடமும் விடைபெற்றுச் செல்கிறார்.

வெற்றிவாள் இடுப்பில் தொங்க, குன்றைப் போன்றதோள்களின் ஒருபக்கம் வில்லும் மறுபக்கம் தூணியுமாக இராம இலக்குவனர்கள் விசுவாமித்திர முனிவரைத் தொடர்ந்து அவருடைய நிழலானது அவரைப் பின் தொடர்ந்து செல்லுவதைப் போலவே அவருடன் செல்லுகிறார்கள். உலகைக் காக்கத் தோன்றிய அவர்களுக்குத் தங்கள் வீரத்தை காட்ட கிடைத்த முதல் வாய்ப்பல்லவா இது! இந்த வாய்ப்பிற்காகவே அவர்கள் காத்துக் கிடந்ததைப் போல தந்தையைப் பிரிகிறோமே! தாய்மாரைப் பிரிகிறோமே! பிறந்து வளர்ந்த இடத்தைப் பிரிகிறோமே என்பன போன்ற வாட்டங்கள் சிறிதும் இல்லாமல் வீரமாகச் செல்ல, மன்னர் தசரதர் மட்டும் தம்முடைய உயிரே தம்மைப்

பிரிந்து செல்வதைப் போல முனவரும் மக்களும் சென்ற வழிமேல் விழி வைத்துப்பார்த்து உருகி வாடி நிற்கிறார். இக்காட்சியைக் கம்பர் வருணிக்கும் இரு பாடல்கள் இதோ;

''வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்புறாத் தூணி யாத்திரு
குன்று போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினான் உலகம் தாங்கினான்''

''அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டாலெனச்
சொன்ன மாதவன் தொடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர் புரிசை நீங்கினான்''.

விசுவாமித்திரரும், இராமஇலக்குவனரும் அயோத்தி நகரத்தை நீங்கிப்போய் சரயுநதிக்கரையில் இருக்கும் ஒருசோலையை அடைகிறார்கள். அங்கு எண்ணற்ற முனிவர்கள் வேள்விகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வேள்வியிலிருந்து கிளம்பும் மங்கலப் புகையுடன் காணப்படும் சோலையும் இராமரின் மனத்தை மிகமகிழ்விக்கிறது. ''சுவாமி! இது என்ன இடம்?'' என்று இராமர் வினவுகிறார்.

''இராகவா! இது தான் காமனாச்சிரமம். சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு யோகத்தை விளக்கிக் காட்ட இவ்விடத்தில் தான் தவம் இருந்தார். அப்பொழுது அவருடைய யோகத்தைக் கலைக்கப் பிரம்மாவின் தூண்டுதலால் வந்து மன்மதன் பாணம் எய்தான். சிவபெருமான் தம் நெற்றிக்கண்ணால் மன்மதனைச் சுட்டு நீறாக்கினார். மன்மதனுடைய அங்கம் எரிந்து நீறானபடியால் இவ்விடம் அங்கநாடு எனவும் அழைக்கப்படும். இவ்விடத்தில் தவம் புரியும் ஞானிகளுக்குத் தம் பொருள் எனும் பற்றும், பிறர் பொருள் மேல் உண்டாகும் அவாவும் வேரொடும் நீங்கும் என்ல் இவ்விடத்தின் புனிதத்தை என்ன வென்பேன்?'' என்று காமனாச்சிரமத்தின் பெருமையை எடுத்துக் கூறுகிறார் விசுவாமித்திரர்.

''வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற்று அங்கம் இங்கு உகுதலால் இவ
ணெலாம்
ஆரணத் துறையுளாய் அங்கநாடு இதுவும் அக்
காரணக் குறியுடன் காமன்ஆச் சிரமமே''.

''பற்றுஅவா வேரொடும் பசையறப் பிறவி
போல்
முற்றவால் உணர்வுமேல் முடுகினார் அறிவு
சென்று
உற்ற வானவன் இருந்து யோகுசெய்தனன்
சொற்றவாம் அளவதோ மற்றிதன்
தூய்மையே''

காமானாச்சிரம முனவர்கள் பலரும் வந்து விசுவாமித்திரரையும், இராம இலக்குவனரையும் வரவேற்றுத் தம் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, உபசரிக்கிறார்கள். அன்றைய இரவைக் காமனாச்சிரம முனிவர்களுடன் மகிழ்ந்து கழித்து, மறுநாள் காலையில் எழுந்து, காலைக்கடன்களை முடித்து மீண்டும் மூவரும் பயணத்தைத் தொடர்கிறார்கள். முதல் நாள் காமானாச்சிரமத்தைக் காணவும், அங்குத் தங்கிமகிழவும் செய்த இராம இலக்குவனர்கள் இப்பொழுது எதிர்ப்படும ஒரு கொடிய பாலைவனத்தையும் காண்கிறார்கள். அக்கினி பகவானையும் தகிக்கச் செய்யும் இக்கொடிய பாலைவனத்தின் வெம்மையைச் சொல்லும் நாகூட வெந்து போய்விடும் என்று சொல்கிறார் கம்பர். வான் மேகங்களும் வானமும் வெந்துவிடும், சூரியனும் வெந்துவிடும், மழைபொழியுமானால் அம்மழையும் வெந்துபோவதோடுமின்னலும் இடியும் கூட இப்பாலையின் வெம்மையால் வெந்துவிடும் என்றால் வேறு எவைதான் வெந்துபோகாதவை என்றும் வினவுகிறார் கம்பர்.

''படியின்மேல்வெம்மையைப் பகரினும்
பகருநா
முடியவேம் முடியமூடு இருளும் வான்முகடும்
வேம்
விடியுமேல் வெயிலும் வேம் மழையும் வேம்
மின்னினோடு
இடியும் வேம் எனில் வேறு யாவை
வேவாதவே''

இத்தகைய வெம்மையை இளைஞர்களான இராம இலக்குவனர் எவ்வாறு தாங்கிடுவர் என்று நம் மனம் அஞ்சுவதைப் போலவே விசுவாமித்திரருடைய மனமும் அஞ்சுகிறது. இராமலக்குவனர்கள் அக்கொடிய பாலை வெம்மையைத் தாங்கிக் கொள்ளும்படியாக பிரமதேவர் அவருக்கு உபதேசித்திருக்கும் பலை, அதிபலை என்னும் மந்திரங்களை இராமலக்குவனருக்கும் உபதேசிக்கிறார். அம்மந்திரங்களை நெஞ்சில் இராமலக்குவனர்கள் நினைத்தவுடன் ஊழித்தீயை விடவும் கொடியதாக இருந்த அப்பாலையின் வெம்மை அவர்களை வாட்டாததோடு முன் காமானாச்சிரமத்தில் எத்தகைய குளிர்ச்சியை உணர்ந்தார்களோ அதேபோன்று குளிர்ச்சியையும் இராமலக்குவனர்கள் உணர்கிறார்கள்.

''நான்முகன்
ஆக்கிய விஞ்சைகள் இரண்டும் அவ்வழி
ஊக்கினன் அவை அவர் உள்ளத்துன்னினார்''

''உள்ளிய காலையின் ஊழித் தீயையும்
எள்ளுறு கொழுங்கனல் எரியும் வெஞ்சுரம்
தெள்ளுதண் புனலிடைச் சேறல் ஒத்தது''

திருநாவுக்கரசர் சைவசமயம் சார்ந்ததால் வெகுண்ட சமண மன்னன் அவரை நீற்றறையில் இட்டுத் துன்புறுத்த திருநாவுக்கரசர் நமசிவாய மந்திரத்தை நினைக்க நீற்றறை குளிர்ந்தது என்பதை நாம் அறிவோம். அவ்வனுபவத்தை நாவுக்கரசரும்

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே''

என்ற தேவாரப் பாடலால் தெளிவுபடுத்தியிருக்கிறார். அத்தகைய ஒரு அனுபவத்தையே விசுவாமித்திரர் உபதேசிக்க பலை, அதிபலை மந்திரங்களின் வாயிலாக உணர்கின்றனர் இராமலக்குவனர் இருவரும்.

இராமர் விசுவாமித்திரரை வணங்கி ''சுவாமி! தாங்கள் உபதேசித்த மந்திரங்களால் வெம்மை மாறி, குளிர்ச்சியை உணர்ந்து மகிழ்கிறோம். இப்பாலைவனம் எப்படி இங்கு உண்டானது என்பதைத் தெரிவித்தருளுங்கள். அறநெறிவழுவாத என் தந்தையாருடைய ஆட்சியால் இப்பாலைவனம் உண்டாகி இருக்க முடியாது. சிவபெருமான் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்த வரலாற்றைத் தாங்கள் தான் எடுத்துரைத்தீர்கள்! இந்த பாலை வனத்தையும் அவர் தம்முடைய நெற்றிக் கண்ணால் எரித்து உண்டாக்கினாரா சுவாமி! எங்களுக்கு எடுத்துரையுங்கள்'' என்று கூற விசுவாமித்

திரர் கொடிய அப்பாலை வனத்தின் தோற்றத்திற்குக் காரணமான தாடகையின் வரலாற்றை விவரிக்கிறார்.

இயக்கர் குலத்தில் தோன்றியவனான சுகேது என்பவன் தூய்மையான குணங்களைக் கொண்டவனே. அவனுக்கு மக்கள் செல்வம் இல்லாத குறை இருந்தது. சுகேது பிரமனை நோக்கி நீண்ட நெடுங் காலம் தவம் புரிந்தான். ஆண் குழந்தைகள் பிறக்காது. ஆனாலும் ஆயிரம் யானை பலங்களோடு ஒரு பெண் குழந்தை உனக்குப் பிறக்க நான் வரம் தருகிறேன்'' என்று பிரமதேவன் அருள் புரிந்தான்.

அவ்வாறு பிரமதேவன் வரத்தால் ஆயிரம் யானை பலங்களோடு சுகேது என்ற யட்சனுக்குப் பிறந்த யட்சகன்னிகைதான் தாடகை. சுகேது சுந்தன் என்ற யட்சனைத் தாடகைக்கு மணமும் செய்வித்தான். அவர்களுக்கு மாரீசன் ,சுவாகு என்றிருவர் ஆண் மக்கள் பிறந்தனர்.

இவ்வாறு அவர்கள் மகிழ்வுடன் வாழ்ந்துவரும் போது தாடகையின் கணவனான சுந்தன் அகத்தியமுனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று அங்கிருந்த பூமரங்களை ஒடித்தழித்து வரலானான். அதனால் கோபம் கொண்ட அகத்தியர் அவனைப் பார்வையாலேயே சுட்டுச் சாம்பலாக்கிவிட்டார்.

சுந்தனின் மரணம் கண்ட தாடகையும் அவளது புதல்வர்களும் அகத்தியர் முன்சென்று ஆரவ்ாரம் செய்தார்கள். அகத்தியர் அழகிய யட்சகன்னிகையான தாடகையையும் அவளது புதல்வர்கள் இருவரையும் அரக்கர்களாகும்படி சபித்துவிட்டார். அகத்தியரின் சாபத்தால் அவர்கள் தங்கள் அழகான வடிவமும் மாறி மனித மாமிசத்தை உண்ணக் கூடிய இராட்சதர்களாய் கோரமான உருவத்தை அடைந்து விட்டார்கள்.

அதுமுதல் அவர்கள் அரக்கனான இராவணனின் தாய்வழி பாட்டனான சுமாலி என்பவனோடு உறவு கொண்டு, இராணவனின் உறவினர்களாகவே விளங்கி வருகிறார்கள். மாரீசன், சுவாகு இருவரும் உலகெங்கும் திரிந்து முனிவர்களின் தவங்களை அழித்துக் கேடுகளைப் புரிந்துவர, தாடகை தனியாக அந்தப் பணியை இந்தப் பாலை வனத்தில் இருந்து செய்து வருகிறாள்.

இன்று கொடிய பாலைவனமாகக் காட்சியளிக்கும் இவ்விடம் முன்பு வளப் நிறைந்த மருத நிலமாகவே திகழ்ந்தது. தாடகை இங்கு வாழ்ந்திருந்த மக்களையும் மற்ற உயிரினங்களையும் கொன்று தின்று சோலைகளையும் பயிர் நிலங்களையும் பாழ் படுத்திப் பாலைவனமாக்கிவிட்டாள். அவள் இன்னும் கொஞ்சநாட்கள் உயிரோடு இருப்பாளேயானால் இவ்வனத்திலுள்ள உயிரினங்களை மட்டுமல்லாமல் உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும்கூட உண்டு தன் வயிற்றில் அடக்கிவிடுவாள்'' என்று விசுவாமித்திரர் பாவமே வடிவமான தாடகையின் கொடுமையை இராம லக்குவனருக்கு எடுத்துரைக்கிறார்.

தாடகை, உலகையே எடுத்து விழுங்கவும், கடலினை வாரிச் சுருட்டவும், ஆகாயத்தை மோதி இடிக்கவும் வல்லவள். அவள் மலைப்பாம்புகளைக்

கைவளையல்களாக அணிந்து கொடுமையான சூலத்தையும் கையில் ஏந்தியிருப்பாள் என்பதைக் கம்பர்

''மண்ணுருத் தெடுப்பினும் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவம் ஈண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் தெரியும்-பெற்றியாள்'

என வடித்துக் காட்டியுள்ளார்.

''சூடக அரவுறழ் சூலக் கையினள்
காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்
தாடகை என்பதச் சழக்கி நாமமே''

''கொடிய தாடகை இப்பொழுது எங்கே இருக்கிறாள்''? என்று விசுவாமித்திரரை இராமர் வினவ, விசுவாமித்திரரும் எதிரே இருக்கும் ஒரு பெரிய மலையைக் காட்டி ''இந்த மலைக்குள் தான் அவள் இப்போது வசித்து வருகிறாள்''என்று கூறி முடிக்கிறாரோ இல்லையோ, தீபிடித்து எரியும் கருப்பு மலைபோன்ற பயங்கர வடிவத்துடன் ஏழுலகங்களும் நடுங்க, ''யாரிங்கே எனக்கு இரையாக வந்த நரபதர்கள்?'' என்று ஆரவாரம் செய்தவாறு அங்கே தோன்றுகின்றாள் தாடகை.

தாடகை நின்றவேகத்தில் மலை இடிந்து மண்ணுக்குள் நுழைகிறதாம். அவள் கால்கள் வைக்க உண்டாகும் பள்ளத்தில் கடல்நீரும் பொங்கி உள்ளே பாய்கிறதாம். எமனும் கூட தாடகைக்கு அஞ்சி ஓட, மலைகளும் மண்ணும் நடுங்கத் தாடகை தோன்றுகிறாள் எனறு வருணிக்கிறார் கம்பர்.

''சிலம்புகள் சிலம்பிடை செறிந்த கழலோடும்
நிலம்புக மிதித்தனள் நெழித்த குழி வேலைச்
சலம்புக, அவள் தறுகண் அந்தகனும் அஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்தொடர வந்தாள்''

இவ்வாறு உலகம் அஞ்சத் தோன்றிய தாடகை, தன் திரிசூலத்தை இராம லக்குவனர் மேல் வீசத் தயாராகும் போதும் இராமரோ தம் கோதண்டத்தைக் கையில் எடுச்கவும் அதில் கணை தொடுக்கவும் செய்யாமல் ''பெண்ணான இவளுடனா நாம் போர்புரிவது?''என்று வாளா நிற்கிறார், அது காணும் விசுவாமித்திரரும் ''இராமா! ஏன் நிற்கிறாய்! கோதண்டத்தை எடு. கணைகளைத் தொடு. தாடகையைப் பெண் என்று எண்ணாதே! இவள் கொடிய அரக்கி! இவளால் இந்திரன் முதலான தேவர்கள் எல்லாம் தோற்று ஓடிவிட்டார்கள் இவளால் உண்டு ஜீரணிக்கப்பட்ட உயிர்த் தொகைகளுக்கு அளவே இல்லை. தவத்தால் வாடிஇளைத்துப் போன முனிவர்கள் ஒருசிலர் தான் இவளிடம் தப்பிப் பிழைத்திருக்கிறார்கள். இத்தகைய கொடிய அரக்கியை மாது என்று பாவம் பார்த்தால் பூவுலகமே நாசமாகிவிடும். ஆகவே தருமத்தைக் காக்க வேண்டி தயை காட்டாமல் இவளை இப்பொழுதே கொன்று வீழ்த்து'' என்று விசுவாமிததிரர் இராமரை வற்புறுத்துகிறார்.

''தீதென்று உள்ளயாவையும் செய்துளமைக்
கோதென்று உண்டிலள் இத்தனையே குறை
யாதென்று எண்ணுவது இக்கொடி யாளையும்
மாதென்று எண்ணுவதோ மணிப்பூணினாய்''

அன்னையின் அருட்பார்வையால் உண்டாகும் அற்புதங்கள்!

தனந்தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபி
ராமி கடைக் கண்களே

—அபிராமி அந்தாதி.



அறநிலையத் துறைக்குப் புதிய ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் புதிய ஆணையாளராக திரு **வ. ராமதாஸ்**, ஐ.ஏ.எஸ் அவர்கள் பதவி ஏற்றுக்கொண்டுள்ளார். இவர் 1971ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியில் உதவி கலெக்டராகப் பணியில் சேர்ந்தார். முசிறி, உசிலம் பட்டி, மதுரை ஆகிய இடங்களில் கோட்ட ஆட்சித் தலைவராகவும் திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரியாகவும், பின்னர் கூட்டுறவு நூற்பாலை நிர்வாக இயக்குநராகவும் பணி ஆற்றினார்.

பின்னர், ஐ.ஏ.எஸ். அந்தஸ்துக்கு பதவிஉயர்வு பெற்று வேளாண்மைத் துறை கூடுதல் இயக்குநராகவும், திருநெல்வேலி மாவட்ட கலெக்டராகவும் குழாய் கிணறுகள வாரியத்தின் நிர்வாக இயக்குநராகவும், வருவாய் நிர்வாகத் துறை இணை ஆணையராகவும் பணியாற்றி உள்ளார். இவர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையராக திங்கட்கிழமை 17.10.88 அன்று பதவி ஏற்றார். ஏற்கனவே ஆணையராக இருந்த திரு தி.இராச.கல்யாணசுந்தரம் அவர்கள் 30.9.88 அன்று ஓய்வு பெற்றார்.

''ஈறில் நல்லறம் பார்த்திசைத்தேன் இவள்
சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்
ஆறி நின்ற தறனன்று, அரக்கியைக்
கோறி என்றெதிர் அந்தணன் கூறினான்''

இவ்வாறு விசுவாமித்திரர் வற்புறுத்த, தருமத்தைக் காக்கும் கடமை பற்றி இராமரும் தம் கோதண்டத்தை எடுக்கிறார். கோதண்டத்தை இராமர் பிடித்ததுதான் தெரியும். அம்பினை அவர் தொடுத்ததும், நாணினை இழுத்து விட்டதும், விசுவாமித்திரரும் இலக்குவனும் கூட காணவில்லை. தாடகை வீசிய கொடிய சூலம் அற்றுப் பல துண்டுகளாகிச் சிதறியதைத்தான் விசுவாமித்திரரும் இலக்குவனும் கண்டனர் என்று கோதண்டபாணியான இராமர் தொடுத்த முதல் பாணத்தின் சிறப்பினையே கம்பர் கற்போர் மனம் களிக்குமாறு பாடிப்போற்றுகிறார்.

''மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்
கோலவிற் கால் குனித்ததும் கண்டிலர்
காலனைப் பறித்து அக்கடியாள் விட்ட
சூலம் அற்றன துண்டங்கள் கண்டார்''

தாடகை, தன் திரிசூலத்தை ஓர் இளைஞன் தகர்த்துப் பொடி பொடியாக்கி விட்டதைக் கண்டு திகைத்து ஒரு நொடிநேரம் மயங்குகிறாள் என்றபோதும், அதுவே அவளுடைய கோபத்தையும் தூண்டிவிட, கற்குன்றுகள் பலவற்றைத் தன் இருகைகளாலும் எடுத்தெடுத்து இடைவிடாமல் வீசுகிறாள். தாடகையால் வீசப்படும் கல் மழையை இராமர் தம் சரமழையால் விலக்கிய பாங்கினையும் கம்பர்

''அல்லின் மாரி அனைய நிறத்தவள்
சொல்லின் மாத்திரையில் கடல் தூர்ப்பதோர்
கல்லின் மாரியைக் கைவகுத்தாள் அது
வில்லின் மாரியால் வீரன் விலக்கினான்''

என்று போற்றுகிறார்.

வீரர்கள் விற்போர் புரிவார்கள். கவிஞர்கள் சொற்போர் புரிவார்கள். உம் என்னும் முன்னமே எழுநூறும் ஆயிரமும் அம்புகளைப் பெய்வது வீரர்களுக்கு எளிது. அம் என்னும் முன்னமே எழுநூறும் ஆயிரமும் சொற்களைப் பெய்து கவிபாடுவது கவிஞர்களுக்கும் எளிது, தாடகையுடனான இராமரின் விற்போரை வருணிக்கப் புகும் கம்பர், கவிஞர்களின் சொற்போரையே அப்போருக்கு உவமையாக்கிக் காட்டி இருப்பது மிகச் சிறப்பான ஒன்று, தாடகை சொல்லின் மாத்திரை ஒன்றிற்குள் கடலையே தூர்க்கும் அளவிற்குக் கற்களை மழை போல வீசினாளாம். இராமரும் தாடகையின் கல் வேகத்தைவிடவும் வேகமான சொல் வேகத்துடனேயே அம்புகளைப் பெய்ய, அவ்வம்புகள் தாடகையின் கற்களையெல்லாம் தகர்த்து அவள் மார்பினையும் துளைத்து மறுபுறமாக ஊடுருவி அவள் உயிரைப் பறித்தன என்று பாடியிருக்கிறார் கம்பர்.

''சொல்லொக்கும் கடிய வேகம்
சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள் மேல்
விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்காது
அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே''

தீயவர்கள் நல்லோர்கள் கூறும் அறிவுரைகளை நெஞ்சில் இருத்திக் கொள்ளமாட்டார்கள், அதைப்போலவே இராமபாணமும் கூட தாடகையின் நெஞ்சில் நில்லாது அவள் உயிரைக் கவர்ந்து புல்லோர்க்கு நல்லோர் சொல்லும் பொருளுரை போல் நில்லாமல் நீங்கிப் போய்விட்டது என்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். அவரே இராம பாணத்தின் வேகத்திற்கு ''சொல்லொக்கும் கடிய வேகத்''தையும் உவமையாக்கி கூறியிருப்பது கற்றுணர்ந்து மகிழத்தக்கது.

—தொடரும்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-6000 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002

சென்னை அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயத்திற்கு அண்மையில் மோரீஸ்நாட்டுக் கல்விமற்றும் கலாச்சார அமைச்சர் மாண்புமிகு ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் வருகைபுரிந்தார். முன்னாள் அமைச்சர் திருமிகு க.இராஜாராம் அவர்களும், அறநிலையத்துறையின் உதவி ஆணையர் திரு ப.தனபால் எம்ஏபிஎல், ஆலய நிர்வாக அதிகாரியும் உதவி ஆணையாளருமான திரு ப. இராஜா பிஏபிஎல் ஆகியோர் உடன் உள்ளனர்.



மேதகு பாரதப் பிரதமர் திருமிகு இராஜீவ்காந்தி அவர்கள் இராமநாதபுரம் அருள்மிகு இராமநாதசுவாமி ஆலயத்திற்கு வருகை புரிந்தார். அறநிலையத்துறையின் ஆணையாளர் திரு ந.ச.இராமச்சந்திரன் பிஏபிஎல்., ஆலய நிர்வாக அதிகாரியும் இணை ஆணையாளருமான திரு ப.அருணாசலம பிஏபிஎல் ஆகியோர் உடன் உள்ளனர்.

பதிவு எண். எம் 7039